437

முரசொலி

வீர இதழ்.

ஆசிரியர் மு. கருணாநிதி

2 அணா

முரசு 2 | சென்னை | 9—12—55 | வெள்ளி | ஒலி 37

★ ஸ்டாலினுக்குத் தடை! ★

அவர் சீடருக்கு வரவேற்பு!

புல்காானின்; குருஷேவ்—பாரதத்திலிருந்து புறப்பட்டு பர்மா போய்விட்டனர்!

இங்கே குதூகல வரவேற்பு கொட்டு மேளத்துடன் எங்கும் ஆரவாரம்!

"ஹிந்தி—ரஷி பாய் பாய்!"-என்று மக்கள் முழங்கினார்கள்.

'ஹிந்தி—ரஷி சகோதர"—என்று கூட அவர்களுக்கு தமிழ் (?) சொல்லிக் கொடுத்து சோவியத் நாட்டின்மேல் தங்களுக்குள்ள சோதர அன்பை நிலைநாட்டியுள்ளார்கள் சென்னையை ஆளும் கூட்டத்தார்!

சோவியத் பூமிக்கும் சமாதானத்துக்கும் உள்ள தொடர்பைப் பற்றியும், அது உலகத்துக்குச் செய்துள்ள சேவைகளைப் பற்றியும் வானளாவ—வான மண்டலத்திலேயுள்ள மேகமளாவ, மேகம் தாண்டி அங்கேயுள்ள நட்சத்திரங்களும், நிலாவும் அளாவ-காமராசர் புல்கானினையும், குருஷேவையும் ஜிம்கானா மைதானத்திலே அறிமுகப்படுத்தி வைத்தார்!

ஹிட்லரோடு உறவு கொண்டாடும் நிலையில் இருக்கும் ஆணவத் தலைவர் ஆச்சாரியாரோ கிண்டி ராஜ பவனத்தில் நடத்தப்பட்ட விருந்தின்போது புல்கானின்—குருஷேவ் இவர்களுடன் அளவளாவியிருக்கிறார்!

நகரில் நடைபெற்ற ஊர்வலத்தின் போதெல்லாம் காமராசர் சோவியத்தலைவர்களோடு கூடவே இருந்தார். ஆச்சாரியாரோ சில நிமிஷங்கள்தான் அவர்களை சந்தித்துப் பேசினார்.

ஆனால் ஆரிய ஏடுகள் அனைத்தும் அந்தச் சந்திப்பை பெரிதுபடுத்தி, புல்கானினும், குருஷேவும் ஆச்சாரியாரைப் பார்ப்பதற்குத்தான் சென்னை வந்ததைப் போல புகைப்படங்களை வெளியிட்டு விளம்பரம் தேடிக் கொடுத்திருக்கின்றன!

—அந்த அளவுக்கு ஆச்சாரியாருக்கு சோவியத் தூதுவர்கள் மேல் 'திடீர் பிரேமை' உதயமாகி யிருக்கிறது!

தழுவிக் கொள்கிறார்கள்; கைலாகு கொடுக்கிறார்கள்; பிரிவதற்கு மனமில்லாதது போல் பிரிகிறார்கள்—கதராடை தரித்த சோவியத்தின் எதிரிகள்!

—இந்த வேஷத்தைப் பார்க்கும்போதுதான் நமக்கு அவர்களுடைய பழையகால சரித்திரம நினைவுக்கு வருகிறது.

முன்பு கலைவாணர் என்.எஸ்.கே. அவர்கள் ஒரு கலாச்சார தூதுகோஷ்டியில் கலந்து கொண்டு ரஷ்யா சென்று வந்தது நினைவிருக்கும். அவர் திரும்பி வந்தகாலை சென்னை நகரமே மெரீனா கடற்கரையில் திரண்டு, சோவியத் நாட்டிலே அவர் கண்ட காட்சிகளைக் கேட்க கூடியிருந்தது.

இது பொறுக்கவில்லை கண்ணியமே உருவானவர் என்று கூறப்படும் காமராசருக்கு!

மறுநாளே பொதுக் கூட்டம் ஒன்றிற்கு ஏற்பாடு செய்து காரசாரமான நடையில் கலைவாணரையும், சோவியத் பூமியையும் திட்ட ஆரம்பித்துவிட்டார்!

இந்தக் கோமாளிக்கு ரஷ்யாவில் நடப்பது என்ன தெரியும்-? என்றெல்லாம் அந்த நகைச்சுவை அரசருக்குத் தரவேண்டிய மதிப்பையும் தராமல் நாலாந்தர நடையிலே ஏசல் கணைகளை ஏவினார்!

—அந்தக் காமராசர்தான் இன்று புல்கானினுடனும், குருஷேவுடனும் சில மணி நேரங்களைக் கழித்துவிட்டு, அதை வாழ்க்கையில பெற்ற பேறு—என்று எண்ணக் கூடிய நிலையிலே இருக்கிறார்!

எந்த சோவியத் நாட்டை அன்று இழித்தும் பழித்தும் பேசினாரோ இன்று அதே சோவியத் பூமியிலிருந்து தயாரான 'டேப் ரிகார்டிங்' இயந்திரமொன்றை புல்கானிடமிருந்து பரிசாகவும் பெற்றிருக்கிறார்!

அது மட்டுமா?

"கம்யூனிஸ்ட்டுகள்தான் என்னுடைய முதல் நம்பர் எதிரி!"-என்று கொக்கரித்தார் ஆச்சாரியார்!

இன்றோ அவர் ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் செயலாளர் குருஷேவுடன் கை குலுக்குவதில் பெருமை பெறும் நிலை உருவாகியிருக்கிறது!

அவ்வளவு ஏன்?

ரஷ்யா என்ற வார்த்தையைக் கேட்டவுடனேயே படமெடுத்தாடும் பாம்பெனச் சீறியிருக்கின்றனர், இந்த ஆட்சியாளர்கள்!

ஸ்டாலின்—என்ற பெயர் எங்கெல்லாம் கேட்டதோ அங்கெல்லாம் குள்ளநரி வேலை செய்யத் தயங்கியதில்லை, இந்த சேங்கோலோச்சிகள்!

'திரும்பிப்பார்' சினிமாப்படத்திலே "ஆவன்னா டூனா ஆடு" என்று துவங்கும் பாடலைக் கேட்டிருக்கலாம்!

அதிலே "கட்டபொம்மன்: காந்தி; கர்மவீரன் ஸ்டாலின்—இவர்கள் கதைகளையெல்லாம் சொல்ல வேணும்"—என்று ஒரு பகுதி வருகிறது!

சிறு குழந்தைகளைப் பார்த்து வீரர்களாக வாழுங்கள்; இலட்சியத்தோடு வாழ்க்கைத் தோணியை மிதக்க விடுங்கள்"-என்று அறிவுரை சொல்லும் பாடல் அது!

இன்று சோவியத்தோடு காதல் கொண்டிருப்பதாக நடித்துக் கொண்டிருக்கும் இந்த அரசாங்கத்தின் "சென்சார் போர்டு" அந்தப் பாடலிலே வரும் 'ஸ்டாலின்' என்னும் பெயரை மட்டும் கத்தரித்து விடவேண்டுமென்று உத்தரவு போட்டது!

சோவியத் நாடு தயாரித்த கலைக் களஞ்சியம் ஒன்றிலே காந்தியாரைப் பற்றிச் சரியானபடி குறிப்பிடவில்லை—என்று இங்குள்ளோர் யாவரும் புழுப் போலத் துடித்தார்கள்!

ஆனால் அவர்களைச் சேர்ந்தவர்கள்தான் ஸ்டாலின் பெயரைக் கூட இங்கு உச்சரிக்கக்கூடாது—என்று தடை போட்டார்கள்!

ஸ்டாலினுக்குத் தடை—இன்று அவர் சீடர்களுக்குக் கோலாகல வரவேற்பு!

கம்யூனிஸ்டுகளை எதிரியென்றனர்!—கவனிக்க வேண்டும்; கம்யூனிசத்தையல்ல அவர்கள் தலைவர் எதிரியென்று குறிப்பிட்டது! அந்தக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் தோழர்களைத்தான் குறிப்பிட்டார்!-இன்றோ அந்தக் கம்யூனிஸ்ட்களின் முதல் செயலாளருடன் மோகம் கொண்டவர்போல பல நிமிஷங்கள் பேசிப் புகழ்ந்து கொள்கின்றனர்!

"சோவியத் நாட்டிலே உள்ள இரும்புத் திரை இந்தக் கோமாளிக்கு எப்படித் தெரியும்?" என்று கோணல் நடையில் நெருப்புப் பிழம்பைக் கக்கியவர்கள் இன்று அந்த நாட்டின் தூதர்களைப் பார்த்து கலகலவென நகைக்கிறார்கள்!

—இந்தப் போலிச் சிரிப்பிலே சகோதரத்வம்இருக்கமுடியுமா? விருந்தினருக்கு அளித்த வெள்ளைக் குல்லாய்க்குப் பின்னால் வெள்ளை மனம் எப்படி இருந்திருக்கும் அவர்கள் கொடுத்த தாம்பூலத்திலே-அளித்த மாஸ்கோவடையிலே, லெனின் கிராட்லட்டிலே அன்பும், பண்புமா தலை காட்டியிருக்கும்?

—'ஹிந்தி—ருஷி பாய் பாய்' என்று கோஷித்த பொது மக்களே! இந்த ரஷ்யாவின் திடீர் காதலர்களைப்பற்றி நீங்களே ஒருமுறை யோசித்துப் பாருங்கள்—அவர்கள் போட்ட வேஷம் புரிந்துவிடும் உங்களுக்கு!

Best copy available

அன்புள்ள குமார்,

கார்ல்மார்க்சின் புரட்சி ஏடுகளை 'கறை' படுத்திக் கொண்டிருக்கும் தென்னாட்டு கம்யூனிஸ்டுகளைப் பற்றியும்-மொழிவழி மாநில அமைப்பு பிரச்சனையில் கம்யூனிஸ்டுகள் தமிழர்களுக்கு இழைத்துவிட்ட துரோகத்தைக் குறித்தும் சென்ற கடிதத்தில் தெளிவுபடுத்தி இருந்தேன்.

உண்மை விளக்கத்திற்கு மகிழ்ச்சி தெரிவித்திருந்தாய்;



கிண்டல் செய்ய எண்ணியிருக்கலாம்! சிங்கங்கள் பார்லிமென்டில் உட்காரமுடியுமா? எனவே 'பாபர்களாக' அதாவது 'சிங்கங்களாக' காட்டிற்கு போய்விடுகின்றன-என்பதைக் குறிப்பிட "'கோரம்' என்பது பாபருக்கு வேறுபெயர்" என்று பதிலளித்து இருக்கிறார். இன்னொரு தோழர், 'லோக் சபா'வில் காங்கிரசின் ஆக்ரமிப்பு அதிகரித்திருப்பதால், அதையே ஒரு கட்சியாக உருவகப்படுத்தி இருக்கலாம், என்று

'ஷோக் சபா'வில் சுகவாசிகள்!

இன்னொரு வேடிக்கையான ஆனால் வேதனை நிறைந்த சம்பவத்தை குறிப்பிடப் போகிறேன்; சிரிக்க வேண்டாம், செவிகளைத் திறந்துவிடு. விழிகளைக் கூர்மையாக்கிக் கொள்; சிந்தித்துப்பார்;

"பர்மோசா ஐரோப்பாவில் இருக்கிறது"

"'லோக்சபா' என்பது இந்தியாவிலுள்ள, முக்கியமான அரசியல் கட்சிகளுள் ஒன்று"

"சினாவுக்கும், ரஷ்யாவுக்கும் இடையே யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது"

"'கோரம்' என்பது முகலாய சக்ரவர்த்தி பாபருக்குள்ள மற்றொரு பெயர்."

'மன்றோ' கொள்கை என்பது, ஒரு நாட்டு மருந்து."

"'பெப்சு' என்பது ஒரு இருமல் மாத்திரை."

"அசோகன் ஒரு முகலாய சக்ரவர்த்தி"

'ஜிப்ரால்டர்' என்பது ஆப்ரிக்காவிலுள்ள பிரான்சுக்கு சொந்தமான இடம்."

'டாலர் ஏரியா' என்றால் எக்காலத்திலும் மழை பெய்யாத பகுதி.

"காரல் மார்க்ஸ்—இந்தப் பெயரைக் கேள்விப் பட்டதே இல்லை"

இந்த வேடிக்கை நிறைந்த பதில்கள் 'விகடகவி' தெனாலிராமன் விட்ட சரடல்ல குமார், சரித்திர நிபுணர்கள் — பொருளாதாரப் புலவர்கள், விஞ்ஞான சித்தகர்கள், ஆகிய பட்டதாரிகள் பரிட்சையின் போது அளித்தவிடைகள்தான் மேலே தரப்பட்டிருப்பவை; வெறும் பட்டதாரிகள்கூட அல்ல; 'ஆனர்ஸ்' பட்டதாரிகள். இந்த பிரதாபத்திற்குரிய செய்தியை ஆந்திர சர்க்கார் பொதுப்பணி தேர்வுக் குழு 54-55-ம்ஆண்டு அறிக்கையை (கண்ணீர் வடித்தபடியே) வெளியிட்டிருக்கிறது.

இந்த அறிக்கை ஒன்றைக் கொண்டே, இந்த நாட்டு மாணவர்களின் கல்வியின் தரத்தை-உலக நாடுகள் எடை போட்டுவிடுமே, என்ற பெருமூச்சும் அந்த அறிக்கையிலிருந்து கிளம்புகிறது.

கல்வித் துறையிலே இருக்கும் அறிஞர்களின் இதயங்களிலெல்லாம் அதிர்ச்சி அலைகளை எழுப்பிவிடும், இந்த 'ஆனர்ஸ்' பட்டதாரிகளின் 'உலக ஞானம்' மாணவர் சமுதாயம் கல்வித் துறையில் எத்தகைய பயங்கரமான-இருள் படிந்த பகுதிகளில் சென்று கொண்டிருக்கிறது என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

நடுநிலை, உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள்கூட பதிலளிக்கக் கூடிய வினாக்களுக்கு—பல்கலைப் பயிலும் கல்லூரி மாணவர்கள், பதிலளிக்க முடியாமல், அறிவுலகை சிரிக்க வைத்திருப்பது சகிக்க முடியாத மானக்கேடாக இல்லையா?

குமார்-சாதாரண எஸ்.எஸ்.எல். சி. மாணவனுக்கு இருக்க வேண்டிய ஆங்கில அறிவுகூட ஆந்திர சர்க்கார் கல்வி இலாகாவில் உதவி 'லெக்சரர்' பதவிக்காக நடைபெற்ற போட்டியில் கலந்துகொண்ட அந்த பட்டதாரிகளுக்கு இல்லையாம்; 'இறந்த கால', 'நிகழ் கால' வேறுபாடுகள்கூட பலருக்குத் தெரியவில்லை என்று அறிக்கை வெளியிடுகிறது.

ஆசிரியர்களாக ஆசைப் பட்ட, அந்த ஆனர்ஸ் பட்டதாரிகளுக்கு இலக்கணத்தின் அரிச்சுவடியே தெரியவில்லையாம்!

தென்னாட்டு கம்யூனிஸ்டுகள் கார்ல்மார்க்சின் பெயரைச் சொல்லிக் கொண்டே, அவர் கொள்கைகளை மறந்துவிட்டிருப்பதைப்போல— 'பொருளாதாரம்' படித்தமாணவர் ஒருவர் பொதுவுடமையின் தந்தை என்று கருதப்படும் கார்ல்மார்க்சைப் பற்றி நான் கேள்விப் பட்டதே இல்லை என்றாராம்.

பேராசிரியர் வேலைக்காக தேர்வு எழுதிய அந்த மாணவர்களுக்கு, ஆங்கில மொழியை சரியாக பேசவும், தெளிவாக எழுதவும் தெரியவில்லையாம்! பெரும்பாலான மாணவர்களுக்கு, தங்கள் சொந்த மாவட்டங்களிலுள்ள, அரசியல், பொருளாதார, தொழில்துறை முக்கியத்வங்கள்கூடத்தெரியக் காணோம், நாட்டின் அன்றாட நடைமுறைகளிலும், செய்தித் தாள்களைப் படிக்க வேண்டும் என்பதிலும்கூட அக்கரை இல்லை, என்று அந்த அறிக்கை மேலும் கண்ணீர் விடுகிறது.

குமார், கல்வித்துறையிலே சராசரி மாணவர்களுக்கு இருக்க வேண்டிய சரித்திர அறிவு—பூகோள விளக்கம்—உலக ஞானம் கூட, கலை பயின்ற கல்லூரி மாணவர்களுக்கு இல்லாமல் போனதற்கு யார் குற்றவாளி? தரக் குறைவு ஏன் ஏற்பட்டது? காரணம் என்ன? என்பது மட்டுமல்ல பிரச்சனை!

விகடகவி பாணியிலே, அவர்கள் அளித்திருக்கும் சில விடைகளில் அரசியலையும் பின்னவிட்டு — வேண்டுமென்றே 'சிலேடை'யாக பதிலளித்தார்களோ-என்றெண்ணும்படி நம்மை வியப்பிலாழ்த்துகிறது.

'பார்மோசாவில்' ஐரோப்பிய அரசியல் வாதிகளின் பிரச்சனை நிழலாடிக் கொண்டிருப்பதால்-ஒரு மாணவர் பார்மோசாவையே ஐரோப்பாவில் தூக்கி வைத்து விட்டாரோ, என்னவோ!

புதுச்சேரியை கைவிட்ட பிரஞ்சுக்கு ஜிப்ரால்டரை, வேறொரு தோழர் அன்பளிப்பாக்கியிருக்கலாம்!

பாபர்—என்றால் 'சிங்கம்' என்று ஒரு பொருள், சரித்திரம் படித்த மாணவர் அல்லவா! பார்லிமென்டில் அடிக்கடி 'கோரம்' இல்லாத நிலைமையை

நம்மால் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள இந்த தரக் குறைவை குறிப்பிடும் இதே நேரத்தில் பாராளுமன்றத்தில் வீற்றிருக்கும் வாய்ப்பினை பெற்றுள்ள காங்கிரஸ் உறுப்பினர்களிடையே வளர்ந்திருக்கும் பொறுப்பற்ற தன்மையையும், தரக் குறைவையும் நேரு பண்டிதர் சுட்டிக்காட்டி வருத்தம் தெரிவித்துள்ள செய்தியை நினைவிற்கு கொண்டு வராமல் இருக்க முடியவில்லை.

குமார்; அரசியல் சட்ட திருத்த மசோதாவை தனிக் கமிட்டிக்குவிடும் பிரேரேபணையில் சர்க்கார் தோல்வியுற்றது. டில்லியில் இருந்தும், பிரேரேபணையின்போது ஓட்டெடுப்பில் கலந்து கொள்ளாத காங்கிரஸ் எம். பி. கள்தான் தோல்விக்குக் காரணம் என்று குறிப்பிட்டிருக்கிறார் நேரு.

டில்லியில் இருப்பதாக கையெழுத்திட்டுவிட்டு, காங்கிரஸ் எம். பி.க்கள் ஊர் சுற்றி வருகிறார்களாம்; இந்த பொறுப்பற்ற தன்மையைக் கண்டித்து ஒரு சுற்றறிக்கையும் விட்டிருக்கிறார்.

இந்த பொறுப்பற்ற தன்மையில் சில மந்திரிகளும் இடம் பிடித்துக் கொண்டிருக்கும் வேடிக்கையை நம்மால் மறக்க முடியுமா?

குமார், காங்கிரசில் உள்ள பார்லிமென்ட் உறுப்பினர்களுக்கு நாட்டின் நலனில் எந்த அளவிற்கு அலட்சியமனப்பான்மை இருக்கிறது பார்த்தாயா?

ஓட்டுப் பிச்சைக்கு வரும் போது-'உங்கள் குரலை அங்கு நான் எதிரொலிப்பேன்' என்று மயக்குமொழி பேசி—வெற்றி பெற்றபின்—கொடுத்த உறுதிகளை காற்றிலே பறக்கவிட்டு சுகவாசிகளாக மாறிவிடுகிறார்கள்; உணவு—உல்லாசம்—

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

One side page dark

தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 9—12—55 வெள்ளி

புயலும் - நாமும்!

கடந்த ஏழு நாட்களாக தமிழகத்தின் தெற்குமுனையிலிருந்து தொடர்ந்து சோகச் செய்திகள் கிளம்பிய வண்ணமிருக்கின்றன. தஞ்சை, மதுரை, திருச்சி, ராமநாதபுரம், திருநெல்வேலி—ஆகிய ஐந்து மாவட்டங்களும் கொடும் புயலும், பேய் மழையும் உண்டாக்கிய அழிவு வேலையின் சின்னங்களாகக் காட்சி தருகின்றன.

மூன்றே ஆண்டுகளுக்கு முன்னர்தான் தஞ்சையிலே புயல் புகுந்து நஞ்செய் வெளிக் காட்டிலே நாச நர்த்தனம் புரிந்தது. அப்போது சருக்கி விழுந்தவர்கள் இன்னும்கூட நிமிர்ந்து நின்ற பாடில்லை! அப்போது சரிந்த குடிசைகள், வளைந்த மரங்கள்—இன்னமும் சரி செய்யப்படவில்லை. அதற்குள்ளாகவே அங்கு மீண்டுமொரு சோதனைக் கட்டம் உருவாகியிருக்கிறது.

உயிர் துறந்தோர்—உடமை பறி கொடுத்தோர்—உற்றார் உறவினரை இழந்தோர்—இவர்களுடைய பட்டியல் பெருகிக் கொண்டே இருப்பது கேட்டு நம் நெஞ்சம் நடுங்குகிறது!

அந்த மாவட்டங்களில் வெளி உலகத்தோடு தொடர்பு கொள்ள முடியாத அளவுக்கு வெள்ளக் காட்டிலே சிக்கியிருக்கும் பகுதிகளும் அதிகமாக இருப்பதாகவே தகவல் வந்து கொண்டிருக்கிறது.

கடலோடு அதிகத் தொடர்பு கொண்ட வேதாரண்யத்திலிருந்து வரும் செய்திகள் நாட்டோரின் வேதனையை அதிகப்படுத்துவதாகத்தான் இருக்கிறது. அங்கே மாண்டோரின் தொகை 226—என்று கூறும் அதிகார வட்டத்துச் செய்தி முதல் ஆயிரம் உயிர்கள் அழிந்திருக்கும் என்று கூறும் வெளி வட்டாரச் செய்தி வரை ஒவ்வொன்றும் ஈரநெஞ்சு கொண்டோர் அனைவரையும் ஈட்டிகொண்டு தாக்குகிறது.

திருத்துறைப்பூண்டி—பட்டுக்கோட்டை—ஆகிய தாலுக்காக்களில் குறுகியகால நெற்பயிர் அத்தனையும் அடியோடே பாழாகிவிட்டதாம்!

வீடிழந்தோர்—உழவனின் நண்பனுயிருந்த மாடிழந்தோர்—இவர்களின் நிலையை எண்ணும்போது, மீண்டும் அவர்கள் புது வாழ்வு துவங்க எப்படியெப்படியெல்லாம் துயர வெள்ளத்தில் எதிர் நீச்சல் போட வேண்டுமோ? என்னும் சோகக் காட்சியை நம்மால் நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை.

முதலமைச்சர் காமராசர் சென்ற புயலின்போது அரசு கட்டிலில் இருந்த ஆச்சாரியாரைவிட அதிவேகத்துடன் ஆக்கவேலையில் ஈடுபடுவது மகிழ்ச்சிக்குரிய செய்திதான்!

ஆனால் விந்தியத்திற்கு அப்பால் ஏகபாரதத்தின் எஜமானர்களாக வீற்றிருப்போரிடமிருந்து ஒரு ஆறுதல் மொழிகூட இதுவரை புறப்படவில்லையே என்னும் ஓர வஞ்சகச் செயலையும் இந்தச் சோக நாளில் எண்ணிப்பார்க்கத்தான் வேண்டியிருக்கிறது.

புல்கானினுடன் கைகுலுக்கி புதுமுறுக்குடனும், புன்முறுவல் ததும்பும் முகத்துடனும் இருக்கிறார், பண்டிதர்! ஆனால் தமிழகத்தில் கண்ணீர்விட்டுக் கதறிக் கொண்டிருப்போர் பக்கம் ஏனோ அவரது கவனம் திரும்பவேயில்லை!

இது ஒன்றும் நமக்குப் புதிதல்ல. பண்டிதரின் பராமுகம் நாம் அடிக்கடிச் சந்தித்து பழக்கப்பட்ட நிகழ்ச்சிதான்!

மூன்றாண்டுகளுக்கு முன் சோழ மண்டலம் சூறாவளியில் சிக்கிச் சீரழிந்தகாலை திருவனந்தைச் சீமையின் உப்பங்கழிகளிலே உல்லாசப் பயணம் நடத்தியவர்தான் அவர்!

அவ்வளவு ஏன்? சென்ற அக்டோபர் முதல் வாரம் பஞ்சாப்—பெப்சு பிரதேசங்களில் நதிகளின் திசைமாற்றத்தால் இங்கு ஏற்பட்டது போன்ற கொடியதொரு வெள்ளம் தோன்றியதே; அப்போது அவர் என்ன செய்தார் தெரியுமா?

வடக்கே வெள்ள மென்றதும் அவர் அடைந்த வாட்டத்துக்கு அளவேயில்லை. அக்டோபர் 9-ம் தேதியன்றே ஆகாய விமானம் மூலம் அம்பாலா விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிட்டார். பஞ்சாபின் கவர்னர்; பஞ்சாப்—பெப்சு பிரதம மந்திரிகள்; மத்ய அரசின் வீட்டுவசதி மந்திரி ஸ்வரன் சிங்—ஆகியோரும் பண்டிதருடன் பிரயாணம் செய்திருந்தார்கள்!

அவர் இப்போது இங்கு வரவில்லை; அனுதாபச் செய்தியும் இதுவரை அனுப்பியதாகவும் தெரியவில்லை!

நகரசபைத் தேர்தலுக்காக மாடுகளைக் கவனிக்க வந்தவர், உண்மையிலேயே அந்த மாடுகளும், அவைகளோடு மனிதர்களும் நூற்றுக் கணக்கில் பலியாவதைப் பார்க்க—பார்த்து தேறுதல் சொல்ல அவரைக் காணோம்!

நேரு வந்துவிட்டால் மட்டும் இங்கு நேர்ந்திருக்கும் துன்பச் சுமைகள் குறைந்து விடுமா? நாட்டு வெறி பிடித்த தேசியத் தோழர்களே இப்படித் தங்களுக்குத் தானே சமாதானம் செய்து கொண்டு ஆக்க வேலைகளில் ஈடுபடக் காணுகிறோம்.

நாட்டு நலன் ஒன்றையே மூச்செனக் கொண்டிருக்கும் திராவிடர் முன்னேற்றக் கழகமும் இந்தத் துக்கமயமான நேரத்தில் தன்னாலான உதவிகளைச் செய்ய முன்வந்திருக்கிறது.

வெள்ளத்தால் பாழான பகுதிகளுக்கு நிவாரணம் அளிப்பதற்காக தி. மு. க. வின் சார்பில் பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் அவர்கள் ஆயிரம் ரூபாய் கொண்ட 'செக்' ஒன்றை அரசினருக்கு அனுப்பியுள்ளார்.

பஞ்சாபிலும், பெப்சுவிலும் நேர்ந்த வெள்ளத்தின்போது அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி பத்தாயிரம் ரூபாய்களை அனுப்பிவைத்தது.

—டாட்டாக்களும், பிர்லாக்களும் தாங்கிக் கொண்டிருக்கும் கூடாரம் அது! "இதைக் கேட்டு சிலர், அவர்களே அங்கே பத்தாயிரம் தந்திருக்கின்றனர்; நாம் இங்கு ஆயிரம் கொடுப்பது ஒன்றும் குறைந்த தொகை அல்லவே!"—என்றுகூட ஆறுதல் பெறலாம்.

ஆனால் நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புவது அது அல்ல!

அந்தக் காங்கிரஸ் கட்சியும் இன்றுவரை தமிழகத்தின் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ஒரு வெள்ளி நாணயம்கூட தந்துதவ முன்வரவில்லை!

சாவு வீட்டிலே சண்டை பாராட்டக்கூடாது—என்பார்கள்! ஆனால் இந்த ஏகாதிபத்யப் பித்தர்களோ துயரத்தால் மக்கள் மூழ்கியிருக்கும் இந்த நேரத்தில்கூட வடக்கு-தெற்கு என்னும் பேதமனப்பான்மைக்கு இரையாகி நிற்கின்றனர்!

தி. மு. க. தந்திருக்கும் ஆயிர ரூபாய்கள் அளவிலே சிறியது போல் தோன்றினாலும் அது அடக்கிக் கொண்டிருக்கும் அனுதாப உணர்ச்சியிலே சற்றேனும் குறைந்ததல்ல. அந்த ஆயிர ரூபாயின் ஒவ்வொரு சல்லிக் காசுகளும் நாம் இந்த நாட்டின்பால் கொண்டிருக்கும் நீங்கா அன்பையும், அளவில்லா விடுதலைப் பண்பையும்தான் பறைசாற்றிக் கொண்டிருக்கும்!

ஏழையர் கழகம் ஒவ்வொரு பைசா நாணயங்களையும் பொறுக்கி எடுத்து அதை ஏழைகளின் சீரமைப்பிற்கே நல்கியிருக்கிறது!

அந்த ஆயிரம் ரூபாய்களோடு நம் கழகத் தோழர்களின் நற்பணியும் பாதிக்கப் பட்டோரைப் போய்ச் சேருகின்றன—என்று கேள்விப்பட்டு பெருமை யடைகிறோம்.

திருச்சி மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர் அன்பில் தர்மலிங்கம் மாவட்ட மன்றத் தலைவரோடு வெள்ளத்தால் தாக்குண்ட பகுதிகளைப் பார்வையிட்டு வந்திருக்கிறார்.

மதுரை மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர் முத்து வெள்ளத்தால் வாழ்விழந்தோரைச் சந்தித்து நிலைமைகளை அறிந்து வந்திருக்கிறார்.

ஆங்காங்குள்ள கழகத் தோழர்கள், "அரசியல் போராட்டத்தில் மட்டுமல்ல; மக்களின் வாழ்வுப் போராட்டத்திலும் கலந்து கொண்டு வெற்றி சூடும் வன்மை எமக்குண்டு!" என்று கூறுவதைப் போல ஆடி ஓடி பணி செய்கின்றனர்.

வெள்ளத்தால் பாதிக்கப் பட்டோர் அனைவருக்கும் நம்முடைய அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்! மீண்டும் அவர்கள் புது வாழ்வு பெற்று பொலிவுடன் வாழ நமது வாழ்த்துக்கள்!

★ பட உலகில் புது வழி கண்டவர்! ★

ஹாலிவுட்டிலே சிரிக்க ...வைட்போர்; சிந்திக்க வைப் ...போர்; செவிக்கு சுவை தரும் ...ம் தருவோர்—இப்படிப் பல ...துறைகளில் கலை கண்ட ...மேதைகள் இருக்கிறார்கள். ஆனால் படத்திலிருக்கும் ஆல்பிரட் ஹிச்காக் இவர் ...ளுக்கெல்லாம் முற்றிலும் ...மாறுபட்டவர்.

அவரது சினிமாவிலே பிரம் ...மாண்டமான காட்சிஜோடனை ...களோ, பிரமிக்கத்தக்க ஆடை ஆபரணங்களோ இருக்காது. ஆனால் படம் பார்ப்போரை, '...ற்றும்' என்னும் எழுத்துக் ...ள் திரையிலே தோன்றும் ...வரை நாற்காலி முனை மீது ...உட்கார்ந்து கொண்டு மூக்கி ...ல் விரல் வைக்கும் அளவுக் ...த் திகைப்படையச் செய்யும் ...மைதான் சுடர் விட்டுக் ...கொண்டிருக்கும்!

காதல்; நகைச்சுவை இவை ...னையெல்லாம்விட ஒரு ...காலையை மையமாக வைத் ...து அவர் எடுக்கும் கதைகள் ...ன்று கொண்டிருக்கும்!

இன்று உலகம் அவரை ஒரு ...தை'; திரைப்பட டைரக் ...டர்களுள் முதன்மையானேரில் ...க்கியமானவர்' என்றெல்லாம் ...ம் மாலை சூட்டுகிறது.

ஆனால் வாரம் பதினைந்து ...ஷில்லிங் சம்பளத்துக்கு ஒரு ...யராகத்தான் லண்டன் ...ரத்தில் அவர் வாழ்க்கை ...யத் துவங்கினர். பின்பு பார ...வுண்ட் படக் கம்பெனியாரி ...ம் சினிமாப் படத்துக்கு '...டைட்டில்' எழுதும் பணியா ...ராக அமர்ந்தார்.

இன்று நாம் பல படங்களின் '...டைட்டிலில்' கதையில்வரும் ...ம்பவங்களைக் குறிக்கும் ஓவி ...ங்களையும், 'கேமரா மேன்' ...என்னும் எழுத்துக்கள் வரும் ...து கேமராவுடன் ஒரு ...ற் படத்தையும் போன்ற ...காட்சிகளைப் பார்க்கிறே ...—இதை முதன் முதலில் ...புகுத்திக் காட்டியவர் ஹிச்காக் ...ன!

முன்பே ஒரு தடவை குறிப் ...பிட்டிருக்கிறேம்: இவர் ...டைரக்ட் செய்த படங்களில் ...காவது ஒரு இடத்தில் ...ர் தலையைக்காட்டி மறைந் ...துவிடுவார்—என்று! இவரு ...டைய விசிறிகள் படம் பார்க் ...கும் போது இவரைக் கண்டு ...பிடிப்பதையே ஒரு பொழுது ...போக்காகக் கொண்டிருக்கிறார் ...கள். இதுபற்றி இவர் கூறு ...கிறார். இப்படித் தோன்றி மறை வதுதான் என்னுடைய 'டிரேட் மார்க்'—என்று!' ஏதாவது ஒரு படத்தில் சில வார்த்தைகளைப் பேசுவது என்றும் முடிவு செய்து விட்டதாகவும் - இவர் கூறுகிறார்.

ஒரு அறையில் ஒரு படம் முழுவதையும் எடுப்பது; நாலைந்து பேர்களைக் கதாபாத்திரங்களாகக் கொண்டே ஒரு மாபெரும் வசூல் படத்தை தயாரிப்பது; கேமிராவை ஒரு அறைக்குள் வைத்துக்கொண்டு அந்த அறையிலிருந்து என்னென்ன பார்க்க முடியுமோ அந்த காட்சிகளைக் கொண்டே படம் முழுவதையும் உணர்ச்சி குன்றாமல் தயாரிப்பது—இவை போன்ற புது முயற்சிகளின் தந்தை இவர் தான்!

"ஒரு டைரக்டருடைய முக்கியமான பணி என்னவென்று என்னைக் கேட்டால் அது படம் பார்ப்போரை விழிப்புடன் இருக்கச் செய்வதுதான் என்று நான் துணிவுடன் கூறுவேன். ஒரு சதுரமான வெள்ளைத் திரையை சுமார் ஒன்னரை மணி நேரத்துக்குக் குறையாமல் பொது மக்களைப் பார்த்துக் கொண்டே இருக்கச் செய்யும் போது, அந்தத் திரையில் அவர்களுடைய கவனத்தை கவரும் வகையில் ஏதாவது ஒன்று இருக்க வேண்டாமா?"

—டைரக்ஷனைப் பற்றி பம்பாய் நகர் பத்திரிகையாளரிடம் அவர் கூறிய கருத்துக்கள் இவைதான்!

அவரைப் பொறுத்தவரை அந்த இலக்கணத்தை மீறியதே கிடையாது!

அவா எடுத்த படத்தைப் பார்த்துவிட்டு சலிப்புடன் திருமபியவர்கள் குருடர்களாகத்தான் இருக்க வேண்டும்!

ஆனால் இந்திய அரசாங்கம் அவர் தயாரித்த 'டயல்-எம்-பார்-மர்டர்' என்னும் படத்தை இந்த நாட்டில் காட்டக் கூடாது—என்றுதடைவிதித்து விட்டார்கள்.

"ஏன் அந்தப்படத்துக்கு இந்திய அரசு தடை செய்து விட்டது?" என்று அவரை நிருபர்கள் கேட்ட போது, "ஆமாம்; ஏன் அப்படி?"—என்று கண்களை அகலமாக்கிக் கொண்டு பத்திரிகையாளர்களிடம் திருப்பிக் கேள்வி எழுப்பினராம்!

சாதாரணகதைகளைச் சத்துள்ளதாக்கும் அவருடைய திறமைக்கு இன்றைய திரைப்பட உலகில் ஈடானவரும் இல்லை; இரண்டாவதாக ஒப்பிடக் கூடியவரும் கிடையாது!

பிணங்களை வைத்துக்கொண்டே படமெடுத்து, இருபத்தைந்து ஆண்டுகளாக படம் பார்ப்போரின ஏகோபித்த மதிப்புக்கு பாத்திரமாக விளங்குகிறார்!

1926-ம் ஆண்டில் அவருக்கு உதவியாளராகப் பணிபுரிந்த ஆல்மா என்னும் அம்மையாரையே அவர் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டார். அதுமுதல் அவர் தான் ஹிச்காக்கை இயக்கி வைக்கும் பிரதான இயந்திரம்; அவருக்கு அரும்பெரும் யோசனைகள் வழங்கும் அமைச்சர்!

—இப்போது ஹிச்காக்குக்கு வயது ஐம்பத்திஐந்து ஆகிறது.

★

'புது உலகம்' கேட்கிறது!

"வீணான பொருளற்ற கோயில் விழாக்களை ஒழித்து, கோயில் பணத்தைக் கொண்டு தொடக்க நிலைப் பள்ளிகளை ஏற்படுத்தி சிறுவர்களுக்கு கல்வி புகட்ட வேண்டும்"

"மக்கள் நலனுக்காக கோயிலே தவிர கோயில் நலனுக்காக மக்கள் அல்ல"

"பொதுமக்களுக்குரிய பொது சொற்பொழிவுகளும், அறிவு விளக்கங்களும் கோயில்களிலேயே நடைபெற வேண்டும்"

"இடைக் காலத்தில் தமிழர் சமயத்தில் புகுந்துவிட்ட களைகளை நீக்க வேண்டும்"

"எதையும் கேட்டு தலையசைக்கும் பொம்மைகளாக இல்லாமல், அறிவையும் ஆராய்ச்சியையும் பயன்படுத்துவது பொதுமக்கள் கடமையாகும்"

போலி சமயவாதிகளுக்கு அதிர்ச்சியைத் தருகின்ற இந்த அரிய கருத்துக்கள், வேளுக்குறிச்சியிலே நடைபெற்ற கூட்டமொன்றில், மதுரை தியாகராசர் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவா டாக்டர், மா. இராசமாணிக்கம், எம். ஏ; எம். ஓ. எல்; பிஎச்டி. அவர்கள் வெளியிட்டிருப்பவை.

★

ஆண்டவன் பெயரால் நடைபெறும் அறியாமைக் கூத்துக்களைத் தடுத்து நிறுத்தவும்—

மக்கள் நலனுக்காக தேவாலயங்களை உபயோகிக்கவும்-

மக்களுக்கான பொதுச் சொற்பொழிவு களுக்கும்—அறிவுப் பணிகளுக்கும்—ஆண்டவன் இல்லத்தை திறந்து விடவும்—

இடைக் காலத்திலே புகுந்துவிட்ட 'அந்தக் களைகளை' எடுத்து எரியவும்—

அறிவுக் கருத்துக்களை கூசாமல் வரவேற்கின்ற மனப் பண்பு பெறவும்—

மாய வாதங்களையும்—மனமருட்சியினையும் மக்களிடையேபரப்புகின்ற 'மாசுகளை' களைந்துவிட்டு—

புதிய பாதையில் பீடுநடை போட்டு புத்துலகை சமைக்கின்ற புரட்சி விழாவில்—கலந்து கொள்ளவும், டாக்டரின் கருத்துப்படி 'மறுமலர்ச்சி'யை வரவேற்கவும் 'சைவம்' பேசுவோர் முன்வருவரா? அதற்கான மனவளம் உண்டா? துணிவு இருக்குமா? என்பதைத்தான் இன்றைய 'புது உலகம்' கேட்கிறது!

சுயபுராணமல்ல!

பி. சி. கணேசன், பி.எஸ்ஸி;பி.டி.

கடிதத்தைப் பிரித்துப் படித்தேன்:

"அன்புள்ள,.......

உங்களுடையகதைகளைப் படித்து அவற்றில் உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்ட பலருள் நானும் ஒருத்தி. கருத்துச் செறிவும் கற்பனை ஆழமும் கொண்ட உங்கள் கதைகள் வெறும் கதைகளல்ல — தேனூறும் தீந்தமிழ்ச் சொல்லோவியங்கள். உங்கள் கதை ஒவ்வொன்றையும் படிக்கும்போது அதனுடைய சிருஷ்டி கர்த்தாவைக் காண வேண்டுமென்ற பேராவல் என் இதயத்தில் எழுந்ததுண்டு. ஆனால், அந்த ஆவலைப் பலமுறை அணை போட்டுத் தடுத்திருக்கிறேன். முடிவில், இன்று......

உங்களுடைய பொன்னான நேரத்தில் ஒரு மணி அவகாசத்தை எனக்காக......மெரினாவில், 'ஸ்விம்மிங் பூல்' எதிரில் இன்று மாலை உங்கள் வருகைக்காக—அடடே, நேரத்தைக் குறிப்பிட மறந்து விட்டேனே—சரியாக ஆறு மணிக்குக் காத்திருப்பேன். மஞ்சள் நிற டிஷ்யூ புடவை, சிகப்புச் சோளி, மடித்துக் கட்டப்பட்ட இரட்டைப் பின்னல், கறுப்பு வெல்வெட் ஸ்லிப்பர்......தயவு செய்து மறந்து விடாதீர்கள்.

மைதிலி."

கடிதத்தைப் படித்து முடிப்பதற்குள் உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டிவிட்டது எனக்கு. "மைதிலி" — பெயரை மீண்டும் மீண்டும் உச்சரித்துப் பார்த்தேன். வாயெல்லாம் இனித்தது! மீண்டும் கடிதத்தைப் பார்த்தேன். இப்பொழுது நான் அதைப் படிக்கவில்லை. மஞ்சள் நிறச் சோளி போட்டுக்கொண்டு, கருநாகம் போல் வளைத்துக் கட்டப்பட்ட பின்னலுடைய ஒரு பெண் உருவமொன்று ஆம்பல் வாய் திறந்து, கோதையருக்கே உரித்தான கொஞ்சு மொழியில் கமதத்தின் வாசகங்களை என்னோடு பேசியது! என் உடம்பெல்லாம் புல்லரித்தது!

கடிதத்தை ஆயிரம் முறைகூட சலிப்பில்லாமல் படித்திருப்பேன். ஆனால், எங்கே என் மனைவி வந்து கடிதத்தைப் பார்த்து விடுவாளோ என்ற பயத்தில், அவசர அவசரமாக அதை மடித்து, 'ஸ்டாண்டில்' மாட்டியிருந்த கோட்டுப் பையில் வைத்துவிட்டு, மீண்டும் நாற்காலியில் அமர்ந்தேன். என் கற்பனைக் குதிரை பயணத்தைத் துவக்கியது.

"இது உண்மையாக இருக்குமா? அவள் என்னுடைய கதைகளைப் பாராட்டினால், என்னை நேரில் பார்க்க வேண்டிய அவசியமென்ன? ஒருவேளை என்னைத் திருமணமாகாதவன் என்று நினைத்துக் கொண்டு......சேச்சே, ஒரு பெண் ஆணைப்பார்க்க வேண்டுமென்று நினைத்தாலே அதற்கு ஏன் நான் விபரீத வியாக்யானம் செய்ய வேண்டும்......ஆமாம், பாராட்டுரை மட்டும் வழங்க வேண்டும் என்று எண்ணியிருந்தால் என் விலாசத்தைக் கண்டு பிடித்துக் கடிதம் எழுதியவள், நேராகவே வந்து என்னைப்பார்த்து ஏன் பாராட்டிவிட்டுப் போயிருக்கக்கூடாது?......"முடிவில்லாமல் என் சிந்தனைச் சக்கரம் சுழன்றது, திடீரென்று அதன் ஓட்டத்திலே ஒருதடை "ஒருவேளை, யாரோ ஒரு ஆசாமி, வேடிக்கை பார்ப்பதற்காக இப்படிச் செய்திருந்தால்......"

"ஆபீசுக்குப் போக நாழி ஆகவில்லையா?" மனைவியின் குரல் கேட்டுக் கற்பனை கலைந்தது!

"தபால்காரரின் சைக்கிள் மணி சத்தம் கேட்டதே, கடிதம் ஏதாவது வந்ததா?"—மனைவி விசாரித்தாள். நான் திடுக்கிட்டேன்! ஆனாலும் சமாளித்துக் கொண்டு, "நமக்கொன்றும் கடிதம் இல்லை!" என்று மழுப்பினேன். அவள் உள்ளே சென்றாள். நானும் குளிக்க எழுந்தேன்.

★

இலையிலே பரிமாறப்பட்ட உணவு, வழக்கம்போல் எனக்கு சுவைக்கவில்லை; வழக்கத்துக்கு மாறான என்னுடைய மௌனத்தை என் மனைவி கவனிக்காமலும் இல்லை.

"பாரகனில், அண்ணாவின் 'ஓர் இரவு' மீண்டும் வந்திருக்கிறதாம், உங்களுக்குத்தான் ரொம்பப் பிடிக்குமே. எனக்கும் இன்னொரு முறை பார்க்க வேண்டும்போல் இருக்கிறது. இன்று சாயங்காலம் ஆபீசிலிருந்து சீக்கிரம் வந்துவிடுங்கள், போகலாம்"

வழக்கம் போல என் மனைவி 'மெனு'வை இலையில் படைத்த பின், மாலை 'புரோகிராமை'யும் கையில் கொடுத்து விட்டாள்.

"இல்லை, பானு; இன்று ஆபீசில் எனக்கு நிறைய வேலையிருக்கிறது. நாளை பார்த்துக் கொள்ளலாம்.

அவள் முகத்தைச் சுளித்தாள்! ஒருவாறு அவளைச் சமாதானம் செய்துவிட்டு—அவள் சமாதானம் அடையவில்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும் — கோட்டை எடுத்துப் போட்டுக்கொண்டு, பையில் அந்தக் கடிதம் பத்திரமாக இருக்கிறதா என்று ஊர்ஜிதம் செய்து கொண்டபின் ஆபீசுக்குப் புறப்பட்டேன்.

★

கடிகாரம் மணி ஐந்தடித்த பின்தான் எனக்கு மன நிம்மதி ஏற்பட்டது. 'அப்பாடா' என்று எழுந்தேன். அன்று பூராவும் என் மனம் வேலையில் ஓடவில்லை என்று கூறுவது, அதிலும் காதல் கதைகள் படித்துப் படித்துப் பழுத்த அனுபவம் பெற்றிருக்கும் உங்களிடம் கூறுவது அனாவசியம். பார்க்குமிடமெல்லாம் நான் பார்க்காத அந்தப் பாவையின் உருவம்தான் தென்பட்டது.

கதை எழுதும் கதாசிரியன் கற்பனையில் எத்தனையோ பெண்களைப் படைக்கிறான். புராணப் பிரம்மா புளுகாக இருக்கலாம்; ஆனால், இந்தக் கலியுகப் பிரம்மாக்கள் —அதுதான் இந்தக் கதாசிரியர்கள் — ரகரகமான பெண்களைப் படைக்கிறார்கள்; அவர்களோடு அளவளாவி மகிழ்கிறார்கள், கற்பனையில்தான்! ஆனால் என்னுடைய இந்த விசித்திரமான நிலையிருக்கிறதே—நிஜ உலகத்தில் நடமாடும் ஒருத்தியை, கற்பனையிலே, கண்ணால் பார்க்காமலே, சித்தரித்து மகிழ்வது...அப்பப்பா! எவ்வளவு சிக்கலான விஷயம்!!

முழு மதி போன்ற முகத்தில் உள்ள அஞ்சனம் தீட்டிய கருவிழிகளை அகல விரித்து, பவளப் பெட்டியில் கோர்த்து வைக்கப்பட்ட முத்துச் சரத்தைக் காட்டி முறுவலிக்கும் மைதிலி!—இது ஒரு சமயம்.

கொண்டல் வண்ணம். கொடை மிளகாய் மூக்கு, நவக்கிரகப் பல்வரிசை, அளவில் மாறுபட்டு ஒத்தியங்க மறுக்கும் உருவக கோளாறு கொண்ட விழிகள் இப்படிப்பட்ட மைதிலி இன்னொரு சமயம்!

ஆடவன் ஒருவனைத்தனிமையில் அழைத்து பாராட்டுரை வழங்கி மகிழ எண்ணும் பாவை; சராசரி அழகுக்குச் சற்று மட்டமானவளாக இருந்தால்கூட இந்தத் தைரியம் வந்திருக்காது! ஆகவே, அவள் கண்டார் கருத்தில் சுமந்து செல்லும்படியான அளவுக்கு அழகுடையவளாகத்தான் இருக்க வேண்டுமென்று மனதைத் திருப்திப் படுத்திக் கொண்டேன்.

'ஆட்டோ ரிக்ஷா'வில் நான் மெரினாவை அடைந்த பொழுது மணி ஐந்தரைக்கு மேலாகிவிட்டது. 'ஸ்விம்மிங்பூலை' நோக்கிக் கால்கள் விரைந்தன. மக்கள் கடலின் மகிழ்ச்சி ஆரவாரமோ' கடலில் எழும் கருநில அலைகளின் அழகோ என் கவனத்தைக் கவரவில்லை. மஞ்சள் நிற டிஷ்யூ புடவை, சிவப்புச் சோளி, மடித்துக் கட்டப்பட்ட இரட்டைப் பின்னல், கருப்புநிற வெல்வெட் ஸ்லிப்பர்—எங்கே அந்தக் கட்டழகி, மைதிலி! என் கண்கள் துழாவின!

அதோ, 'ஸ்விம்மிங் பூலு'க்குச் சற்று அப்பால்— அவளேதான்—அதே அடையாளங்களுடன், கடலின் அழகில் மனதைப் பறிகொடுத்து நிற்கிறாள். முகம் கடல் புறமாகவும், முதுகு, ரோடைப் பார்க்கும்படியும் நின்று கொண்டிருந்தாள். கடிதத்தில் குறிப்பிட்ட அடையாளங்களெல்லாம் சரியாக இருக்கின்றனவா என்று கடிதத்தை எடுத்து சரிபார்த்துக் கொண்டேன். சாட்சாத் மைதிலியே தான்!

என் மனம் படபடத்தது. என் உடைகளை சரிப்படுத்திக் கொண்டேன். நெற்றியில் வழிந்த வியர்வையைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டு மெதுவாக அவளை நோக்கிச் சென்றேன்.

அருகே சென்று பேச வாயைத் [illegible]தேன். தொண்டையில் ஏதோ அடைத்துக் கொண்டது போன்ற உணர்ச்சி. தொண்டையைச் சரிப்படுத்திக் கொண்டு, "ஹாம், நீங்கள்தானே..."

அவள் திரும்பினாள்; என் தலை சுழன்றது! என் மனைவி பானு, புன்னகையோடு நின்று கொண்டிருந்தாள்!

"என்ன விழிக்கிறீர்கள். மஞ்சள் நிற டிஷ்யூ புடவை, சிவப்புச் சோளி, மடித்துக் கட்டப்பட்ட இரட்டைப் பின்னல், கறுப்பு வெல்வட் ஸ்லிப்பர்... அடையாளம் சரிதானே!" அவள் அபிநயம் பிடித்துக் காட்டினாள்.

நான் பதிலே பேசவில்லை!

"மணி இன்னும் ஆறுகூட ஆகவில்லை. வாருங்கள், பாரகனுக்குப் போய் 'ஓர் இரவு' பார்த்துவிட்டு வருவோம். இனிமேல் ஆபீசில் ஒன்றும் அலுவலில்லையே!" அவளுடைய பேச்சில் கேலியும் குறும்பும் கலந்து ஒலித்தன!

நாங்கள் பீச்ரோடில் நடந்து சென்று கொண்டிருந்தோம். "இந்த எழுத்தாளர்களே விசித்திரமான பிரகிருதிகள். பெண் என்றால் போதும், பல்லை இளித்துக் கொண்டு பின்னே ஓடிவிடுவார்கள்" அவள் பிரசங்கத்தைத் தொடர்ந்தாள்.

"போதும் பானு, உன் பிரசங்கம்! கடிதம் எழுதியதிலிருந்து 'நாடகம்' பூராவும் உன்னுடையதுதானா. அல்லது, என் பையிலிருந்த கடிதத்தைப் பார்த்தபின் இந்தவேஷத்தில்இங்குவந்தாயா?"

என் கேள்விக்குப் பதில் சொல்லாமல், ஒரு குறும்புப் புன்னகையை நெளியவிட்டாள். வழியில் வந்த 'பேபி டாக்ஸ்' ஒன்றை நிறுத்தினாள். இருவருமாக அதில் ஏறிக்கொண்டோம். 'பேபிடாக்ஸி' பீச்ரோடில் வேகமாகப் பறந்தது. ஸ்விம்மிங்பூலை' அது தாண்டிச் சென்றபோது, கடிதத்தில் குறிப்பிடப்பட்ட அந்த இடத்தை உணர்ச்சியில்லாமல் பார்த்தேன்.

மஞ்சள் டிஷ்யூ புடவை, சிவப்புச் சோளி மடித்துக் கட்டப்பட்ட இரட்டைப் பின்னல் வெல்வெட் ஸ்லிப்பரோடு, அழகையே வடித்தெடுத்தது போன்ற ஆரணங்கு ஒருத்தி, கெண்டை விழிகளைச் சுழலவிட்டு யாருடைய வருகைக்காகவோ காத்துக் கொண்டு நின்றாள்!

★

அறிக்கை

அன்புள்ள தோழர்களே,

டில்லி நகரில் நடைபெறும் சர்வதேசத் தொழிற் கண்காட்சியைக் காணவும், வடநாட்டில் ஏற்பட்டுள்ள நீர்ப்பாசன, தொழில் அபிவிருத்திகளைக் கண்டறியவும், எனது துணைவியாருடன் காரில் புறப்பட்டு செல்லுகிறேன். திரும்ப ஒரு மாத காலம் ஆகலாம் என எண்ணுகிறேன். எனவே அதுவரை நிகழ்ச்சிகளுக்கு ஒத்துக்கொள்ளுமாறு பணித்துக் கடிதங்கள் எழுதாமல் இருக்குமாறு பணிவன்புடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

தங்களன்புள்ள,
ஈ. வே. கி. சம்பத்.
28—11—55.

புதையல்

மு. கருணாநிதி

சென்ற இதழில்.....

மாயாண்டி, ஒரு படகில் ஏறிக்கொண்டு. அதைத் தானே செலுத்திக் கொண்டு போகும்போது, அம்பலம் அவர்மீது கத்தியை வீசுகிறார் படகிலேயே மாயாண்டி பிணமாகிறார். அவரது கையிலிருந்த புதையல் ரகசியம் கடலில் நழுவி விழுகிறது. அப்போது. துரையும் பரிமளாவும் அங்த வருகிறார்கள். தாண்டவன் மூலம் மாயாண்டி கொல்லப்பட்ட செய்தி அறிந்து துடிக்கிறார்கள். அப்போது அம்பலத்தின் ஆட்கள் அவர்களைச் சூழ்ந்துகொள்ளவே: திகைக்கிறார்கள். நெருக்கடியான நேரத்தில் போலீஸ் படை வருகிறது. அம்பலம், கடல் நோக்கி நடந்து மறைகிறார். போலீசார் அவரைத் தேடுகிறார்கள். மாயாண்டிக் கிழவரின் மடியிலே ஒரு காகிதச் சுருள் இருக்கிறது...

51

புதையல்!

மாயாண்டியின் எழுத்துக்கள்தான் அவைகள். "அன்புள்ள துரைக்கு" என்று ஆரம்பிக்கப் பட்டிருந்தது கடிதம்.

"அன்புள்ள துரைக்கு இதய வாழ்த்து. நான ஈடுபட்டிருக்கும் காரியங்களால், நாமிருவரும் இனி மேல் சந்திக்கவே முடியாமற் போய்விடுமோ என்ற சந்தேகம் ஏற்பட்டுவிட்டது எனக்கு. அதனால்தான் உன் கையிலோ அல்லது யாராவது நல்லவர் கையிலோ கிடைக்காதா என்ற ஆவலுடன் இந்தக் கடிதம் எழுதுகிறேன்.

இந்தக் கடிதத்தை நீ படிக்கும் நிலைமை ஏற்பட்டால் அப்போது நான் இறந்துபோயிருப்பேன் என்றுதான் பொருள். ஒருவேளை, நீ என் பிணத்தின் அருகாமையிலே நின்றுகொண்டுகூட இதைப் படிக்க நேரிடலாம். அனைத்தையும் வறுத்துவிட்ட துறவிபோல என் பயணத்தை ஆரம்பித்தேன். நீயும் பரிமளாவும் குறுக்கே வந்தீர்கள். புதையல் ரகசியத்தைக் காப்பாற்ற வேண்டும் என்கிற பொறுப்போடு. உங்கள் இருவரையும் காப்பாற்ற வேண்டும் என்கிற பொறுப்பும் வந்து சேர்ந்தது எனக்கு. இதைப் பொறுப்பு என்று சொன்னால்கூட அவ்வளவாகப் பொருந்தாது; பாசம்என்று சொல்லவேண்டும் மகனே, பாசம் என்று சொல்லவேண்டும். நீ, வியப்படைவதையும், உன் கூரிய விழிகள் விரிவடைவதையும் என்னால் காண முடியவில்லை தம்பி! நான்தான் உன் தந்தை குமாரவடிவு.

சொந்த நாட்டில் பிழைக்க வழியில்லாமல் கடல் கடந்து வயிறு கழுவச் சென்ற குமாரவடிவு நானேதான்.

குமாரவடிவு, கோயிலில் நுழைந்து சிலைகளைப் பெயர்க்கும் போது பாம்பு கடித்து இறந்து விட்டான் என்று உன்னிடம் சொல்லியிருந்தேன். இல்லை, மகனே—இல்லை! குமாரவடிவு அப்போது சாகவில்லை. சிறையிலிருந்து வெளிவந்த குமாரவடிவு சிலைகளை பெயர்க்கும் தொழில் நடத்தி ஜீவனம் நடத்திவந்தான்.

குமாரவடிவு என்ற பெயரோடு அல்ல; மாயாண்டி என்ற பெயரோடு! அப்படிப் பெயர்க்கும் போதுதான் ஒருநாள் மருங்கப் பள்ளம் கோயிலிலே என் கையில் புதையல் ரகசியம் சிக்கியது. பாம்பு கடித்தது என்று சொன்னேனே; அது உண்மையிலேயே உருவத்தில் பாம்பல்ல என்றாலும்-பண்பிலே பாம்பாகத்தான் வந்து சேர்ந்தது. புதையல் ரகசியம் என்னிடம் வந்தபிறகு என் வாழ்விலே திருப்பம் ஏற்பட்டது. பாம்பை மடியிலே கட்டிக் கொண்டிருப்பதுபோல அந்த ரகசியத்தை கட்டிக் கொண்டு ஊர் சுற்ற ஆரம்பித்தேன். மருத்துவனைப் போல சாமியாரைப் போல மக்களிடையே நடமாடினேன். எப்படியோ என் பிழைப்பு நடைபெற்றது.

எத்தனையோ கோடி தங்க நாணயங்களுக்கு நான் சொந்தக்காரன். ஆனாலும் அவைகளைக் கண்ணால் பார்க்கவும் நான் விரும்பவில்லை. ஒருவிதமான தெவிட்டல் ஏற்பட்டுவிட்டது. சிலைகளைப் பெயர்த்து அதன் கீழேயுள்ள நாணயங்களையும் கற்களையும் திருடி அதன் மூலம் வாழ்க்கையை நகர்த்தியிருக்கிறேன். ஆனால், எனக்காகக் கோடிக் கணக்கில் குவிந்து கிடக்கும் பொன்மணிகளை ஏறெடுத்தும் பார்த்தேனில்லை. அது ஏன் என்றுதான் உன்னிடம் முன்பே சொல்லியிருக்கிறேனே துரை! மறுபடியும் பழைய கதையை ஞாபகப்படுத்துவானேன்.

அப்படி ஞாபகப்படுத்தினால், மண்ணுக்கடியிலே புதைந்துகிடக்கும் தங்கப் பாளங்களும் வைரக் கற்களுமா ஞாபகத்திற்கு வருகின்றன. தங்கம் நிகர் தங்கமும், என் தாயும், என்னருமை வள்ளியம்மாளும் அல்லவா, எடுக்க முடியாத புதையலாக மண்ணுக்குள் மங்கிக் கிடக்கிறார்கள், அதையெல்லாம் நினைத்து அழுவதற்கு நேரமில்லை தம்பி. உன்னைப் பார்த்தேனே; அதுவே போதும் புதையல் கிடைத்ததுபோல!

உன்னையும் பரிமளாவையும் சந்திப்பதற்கு முன்பு, காதல் என்ற மூன்றெழுத்து வார்த்தையைப்பற்றி நான் போட்டிருந்த கணக்கே வேறு. நீதான் என் டைரி முழுவதும் படித்து என்னைப்பற்றித் தெரிந்து கொண்டிருக்கிறாயே. மகனே! அந்த டைரிகளில் ஏதாவது மிச்சம் மீதி இருந்தால் அதன் கடைசிப் பக்கத்திலே எழுதிவை.

"காதல் என்பது ஒரு மயான பூமி என்று என் தந்தை எண்ணியிருந்தார்; ஆனால் அங்கே சில சமயங்களில் மலர்ச் செடிகளும் முளைப்பதுண்டு என்ற முடிவுக்கு அவர் வந்தார்"

இதுபோல எழுதிவை மகனே! காதலைப் பற்றிய என் அபிப்பிராயம் முழுவதும் மாறிவிட்டது என்று நீயோ, பரிமளாவோ கருதிவிட வேண்டாம். முட்களே நிறைந்த செடியில் ரோஜா இருப்பதுபோல ஒரு சில துரைகளும், ஒரு சில பரிமளாக்களும் இருக்கலாம். இதுதான் நான் இறுதியாகப் போட்ட புள்ளி. இந்தத் தொகை ஒருவேளை கூட்டவும் நேரிடலாம் அதற்காக சந்தோஷப்பட மறுக்கவா போகிறார்கள் என்னைப் போன்றவர்கள்!

வெள்ளியம்பலம் போன்ற காட்டானைகள் திரியும் நாட்டில் உன்னையும் பரிமளாவையும் போன்ற மான்குட்டிகள் நிம்மதியாகவாழ்வதுகஷ்டந்தான். ஆனால் துரை, நீயும் உன் காதலியும் இத்தனை இடையூறுகளையும் தாங்கிக் கொண்டு காதல் சாம்ராஜ்யத்தைக் காப்பாற்ற கம்பீரமாக நின்றீர்களே; அதை நான் பாராட்டுகிறேன். அதே சமயத்தில் காதலுக்காக நெஞ்சிலே ஒதுக்கியிருக்கும் இடத்தில் ஒருபாதியை மக்களுக்குப் பணி செய்வதற்காக ஒதுக்குவது நல்லது. நான், அந்தக் காரியத்தில் இறங்குவதற்கு இளமையிலே சக்தியற்றுப்போய் விட்டேன். இலங்கை என்னை கசக்கிப் பிழிந்துவிட்டது. தேயிலைச் சீமைக்கு என் தேகத்தைத் தேய்த்து கொடுத்து விட்டேன். பிற்பகுதியும் சிறையிலே சிதைந்தது. இறுதிப் பகுதியிலே சிறிது முயன்றேன். அதற்குள் சுயநலம் குறுக்கிட்டு விட்டது. மகனையும், மருமகளையும் காப்பாற்ற வேண்டிய சுயநலம்! அதனால்தான் உன்னிடம் ஒப்புவிக்கிறேன் அந்த வேலையை!

எத்தனையோ தியாகச் செம்மல்கள், வீடு, வாசல், மாடு, மனைகளை விட்டு நாடு, நாடு, என்று பாடிக் கிளம்புவார்கள். அவர்களின் அணிவகுப்பிலே நீயும் ஒருவனாகத் திகழவேண்டும் துரை! பரிமளாவை விட்டுப்போக வேண்டாம், அவளையும் அழைத்துப்போ! நாட்டிலே செய்வதற்குக் காரியங்களா இல்லை! நூற்றுக் கணக்கான வெள்ளியம்பலங்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் பாடம் கற்பிக்க வேண்டும்.

ஊரிலே பெரிய மனிதர்களாக நடந்துகொண்டு ஊதாரித்தனமாக வாழ்க்கை நடத்தும் அம்பலங்களை ஒழித்துக் கட்டுவதே உத்தமர்களின் வேலையாக இருக்க வேண்டும். அப்பப்பா; சாதாரண வசதிகள் படைத்த இந்த அம்பலமே இப்படி காட்டு ராஜா தர்பார் நடத்தினால் பெருந்தனம் படைத்த சீமான்கள் எனப்படுவோர் எப்படி யெப்படி மக்களை ஆட்டிப் படைக்க மாட்டார்கள்!

அம்பலம் செய்திருக்கிற கொலைகள் ஒன்று இரண்டா! போலீசாரின் கண்களிலே பொடி தூவிவிட்டு கொடி கட்டி வாழும் கொடியவனல்லவா இந்த அம்பலம். துரை! உன்னைக் காப்பாற்ற வேண்டும் என்ற சுயநல ஆசையிலே என்னையறியாமலே பொதுநலத் தொண்டு ஒன்றும் செய்திருப்பதாக நான் கருதுகிறேன். இந்தக் கடிதம் எழுதும் போது, அம்பலத்தின் முடிவு என்ன என்பது எனக்குத் தெரியாது. ஆனால் போலீசாரின் கையிலே அவன் சிக்கித் தீர வேண்டிய நிலைமைகளை உருவாக்கி வைத்திருக்கிறேன். புதையலை அபகரிக்க நாக்கை தட்டிக் கொண்டுவந்த ஐயப்பனின் கையை நான் வெட்டி எறிந்தேன் என்பதுதான் உனக்குத் தெரியும்.

ஆனால் அம்பலத்தின் சூழ்ச்சியால் நீயும் நானும் விடுதலை அடைந்தோம். எனக்குப் பதிலாக துக்காராமைப் பிடித்துக் கொடுத்தான் அம்பலம். அவனுக்கு அப்போது நீயும் நானும் தேவைப்பட்டோம். அந்தத் தேவைக்குத் துக்காராம் பலியானான்......அந்தோ, பரிதாபம்— சிறைச்சாலையிலே வாடும் துக்காராமை எப்படியாவது விடுதலை செய்ய வழிபார்! இதோ இந்தக் கடிதமே நல்ல சாட்சி.

ஐயப்பனின் கையை நான்தான் வெட்டினேன் என்கிறபோது துக்காராமைத் தண்டிக்க நியாயமில்லை அல்லவா? முன்பே அந்தக் குற்றத்தை நான் ஒப்புக் கொண்டிருப்பேன். அப்படி ஒப்புக் கொண்டு சிறை புகுந்திருப்பேனேயானால் நீயும் பரிமளாவும் என்ன கதி ஆகியிருப்பீர்களோ, யார் கண்டது?

நான் வெளியில் இருந்ததால் தான் வெள்ளியம்பலத்தையே ஏமாற்றி, அவன் செலவிலேயே உனக்கும் பரிமளாவுக்கும் திருமணம் நடத்த முடிந்தது. தம்பீ, அதற்காக நான் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறேன் தெரியுமா? போலித் தகடுகளும், போலிப் பெட்டிகளும் தயார் செய்தேன். அவைகளின் மூலம் வெள்ளியம்பலத்தை ஏமாற்றினேன்.

கடைசியாக ரத்தம் வேண்டும் என்றேன். அதன் மூலம் உங்கள் திருமணத்திற்கு ஏற்பாடு செய்தேன். என் ஏற்பாடுகள் திடீர் திடீர் என்று மாறுகிற அளவுக்கு சம்பவங்கள் நிகழ்ந்தன என்றாலும். 'அந்தச் சம்பவங்களையெல்லாம் நமக்கு சாதகமாகவே ஆக்கிக்கொண்டேன், அம்பலத்து வீட்டு வேலைக்கார ராமனை கைக்குள் போட்டுக் கொண்டேன். அவன்தான் சொன்னான்; மேனகாவை அம்பலந்தான் கொன்றான் என்று! அவன் மூலம் தான் அறிந்தேன்; மேனகா கொலை விஷயமாக ஒரு குடுகுடுப்பைக்காரன் கைது செய்யப்பட்டிருக்கிறான் என்பதையும்! குடுகுடுப்பைக்காரன் என்றதும் முதலில் பயந்தேன் பரிமளா தான் அகப்பட்டுக் கொண்டாளோ என்று! பிறகு தெரிந்தது. ஷோக்சுந்தரி என்ற பெண் என்று!

துரை! முடியுமானால் அந்த ஷோக் சுந்தரியை விடுதலை செய்து ராமனை மகிழ்ச்சிப்படுத்து! அதே போல துக்காராமின் விடுதலையால் பரிமளா மீதுள்ள பழியும் நீங்கும். அந்த இருவரின் விடுதலையையும் அக்கரையோடு கவனி. இன்னும் என்ன எழுத இருக்கிறது மகனே!

உங்கள் வாழ்க்கையிலே தாண்டவனின் குறுக்கீடு இருக்குமோ என்று சந்தேகப்படத் தேவையில்லை. தாண்டவன் நமக்கு மிகவும் நெருங்கிய உறவினர். நான் தான் குமாரவடிவு என்ற உண்மையைச் சொல்லி, என் மகனுக்கு நான் பெண் கேட்டதும் அவர் அளவற்ற மகிழ்ச்சியில் ஆழ்ந்தார். அதன் பிறகுதான் அவரும் அம்பலத்தை எதிர்க்கத் துணிந்தார். வெறும் ஆட்டு ரத்தத்தை கத்தியில் பூசிக்கொண்டு அவர் ஆடிய ஆட்டமிருக்கிறதே, அதை நீ பார்த்திருக்க மாட்டாய்... அவருக்கு என் நன்றியைச் சொல்லு!

ராமனை மறந்துவிடாதே — அந்தக் குள்ளப் பையன் நல்ல சமயத்தில் எனக்கு உதவிகள் செய்தான்.

மேனகா, கொலை சம்பந்தமாக வழக்கு நடைபெற்றால் அவன் நேரில் கண்ட சாட்சியாக விசாரிக்கப்படத் தகுதியுள்ளவன். இன்னொன்று சொல்ல மறந்துவிடப் போகிறேன், உனக்கு வாய்த்திருக்கிற நண்பர்கள் இருக்கிறார்களே; அவ்வளவு பேரும் மணிகளப்பா மணிகள்! தோழமைக் குன்றங்கள்! அடடா அந்த ஆனந்தன் பட்டிருக்கிற பாடு கொஞ்சமா? அம்பலத்தின் வீட்டிற்கு நெருப்பு வைத்தேன். நீங்கள் உள்ளேயிருக்கிறீர்கள், சோபன அறையில்! உங்களை வெளியேற்றும் நோக்கத்துடன்தான் வீட்டுக்குத் தீ மூட்டப்பட்டது. அந்தச் சமயத்தில் கதவுகள் உள்ளே தாள் போடப்பட்டன அம்பலத்தின் ஆட்களால்! சிறிது தாமதித்தால் நீயும் பரிமளாவும் சாம்பலாகி விடுவீர்கள். அப்போது உன் தோழன் ஆனந்தன் வீட்டுக்குள்ளே குதித்திருக்கிறான் பார்; அடடா... அந்த நல்லவனுக்கு என் வாழ்த்துக்களை குவித்திடு!

கடிதத்தை நீட்டிக் கொண்டே போவேன்—இன்னும் எவ்வளவோ சொல்ல வேண்டியிருக்கிறது உனக்கு! சாகாமல் நேரில் சந்தித்தால் நிறைய பேசலாமே என்ற நம்பிக்கை வேறு தலை நீட்டுகிறது. அப்படி சந்தித்தால் நான் உன் தந்தை என்பதைக் கூற மிகவும் வெட்கப்பட்டிருப்பேன். கஷ்டப்பட்டிருப்பேன்.

உன் கண் எதிரே நான் சாக நேரிட்டால் என் மடியிலுள்ள புதையல் ரகசியத்தை உன்னிடம் தந்திட முடியும். இல்லாவிட்டால் அதுவும் நானும் மறைந்து விட்டதாகத்தான் அர்த்தம்.

தம்பீ, நான் எழுதியிருப்பவைகளையெல்லாம் மறந்துவிடாதே. நான் வருகிறேன். விடைபெற்றுப் போய்விட்ட பிறகு மீண்டும் விடைபெற்று என்ன பிரயோஜனம். இப்போதுதான் கருதுகிறேன்; மோட்சம் நரகம் என்றெல்லாம் முட்டாள்கள் கதறுகிறார்களே; அவை இருக்கக் கூடாதா என்று! அப்படி அவை இருந்தால், அங்கிருந்த படியே என் "அந்தராத்மா" உன்னைப் பார்த்து மகிழ்ந்துகொண்டிருக்குமல்லவா? பரவாயில்லை—சாவதற்குள் உன்னைப் பார்த்து, உனக்காக சில நன்மைகள் செய்வதற்கு இந்தப் பாவிப் பயன்பட்டேனே; அது போதும்!

அன்பு மகனே! என் அருமை மருமகளுக்கு என் வாழ்த்துக்களைச் சொல்லு! என் பிணம் உன் கண்ணிலே அகப்பட்டால், தங்கத்திற்குப் பக்கத்திலே புதைத்து விடு!

அன்புள்ள தந்தை,
குமாரவடிவு.

துரையும், பரிமளாவும் கிழவரின் சவத்தின்மீது விழுந்துபுரண்டு அழுதனர்.

துரை, 'அப்பா! அப்பா! என்று கதறினான்.

கிழவரோ, தன் வேலைகளையெல்லாம் முடித்துக் கொண்டு களைப்புற்று தூங்குகிறவர் போலக் காணப்பட்டார்.

அம்பலத்தை தேடிய போலீசார் வெறுங்கையோடு திரும்பினர்.

மருங்கப் பள்ளம் மக்கள் அனைவரும், துரையையும் பரிமளாவையும் மகிழ்ச்சி ஆரவாரத்தோடு வரவேற்றனர். கிழவரின் கல்லறையும், தங்கத்தின் நினைவுச் சின்னமும் அருகருகே அமைக்கப் பட்டன. மாயாண்டியின் கடிதப்படி, சிறையில் இருக்கும் குடுகுடுப்பைக்காரன் ஷோக்சுந்தரிதான் என்று போலீசார் சோதனை செய்யவே, தப்பி ஓடிய துக்காராம் என்று தெரிகிறது. மேனகாவின் கொலை வழக்கில் துக்காராம் சிக்கமாட்டான், ஐயப்பன் கொலை வழக்கிலும் அவன் சம்பந்தமில்லை, சிறையிலிருந்து ஓடிய குற்றத்திற்காக மட்டும் ஐந்தாறு மாதம் தண்டனை கிடைக்கும் என்று சட்டம் தெரிந்தவர்கள் பேசிக் கொண்டார்கள். பரிமளா அது கேட்டு சந்தோஷப் பெருமூச்சு விட்டாள்.

அந்த மகிழ்ச்சிச் செய்தியோடு, அவளும், துரையும் மனோரா நோக்கிப் பறந்தார்கள். காதல் தேம்பாட!

மனோரா கடற்கரைப் பகுதியிலே அவர்கள் வானம்பாடிகள் போலத் திரிந்தார்கள். இன்ப கீதம் இசைத்துக் கொண்டிருந்த அவர்களின் முன்னே கடல் அலைகளால் மோதுண்டு ஒரு உருவம் ஆடிக் கொண்டிருந்தது. அருகேசென்று பார்த்தார்கள். வெள்ளியம்பலத்தின் மூச்சற்ற உடல்தான் அது!

துரை, அம்பலத்தின் பிணத்தை உற்றுப் பார்த்தான். பிணத்தின் கை இறுக மூடியிருந்தது. கஷ்டப்பட்டு கையைத் திறந்து பார்த்தான். கைக்குள்ளே புதையல் ரகசியம் இருந்தது. துரை அதை ஆச்சரியத்தோடு பார்த்தான்.

பரிமளா, "ஆகா! புதையல் ரகசியமா?" என்று குதித்தாள். துரை, "ஆமாம்" என்று சொல்லிக் கொண்டே. அதை, கடலில் வீசி எறிந்தான்.

"அய்யோ! புதையலை வீசி விட்டீர்களே!" என்று திடுக்கிட்டாள் பரிமளா!

"போனால் போகிறது! பேசும் புதையல் நீ இருக்கும்போது. பெரும்பகை வளர்க்கும் அந்தப் புதையல் எதற்காக" என்று அவளை அணைத்தவாறு போலீஸ் ஸ்டேஷனுக்குப் புறப்பட்டான், வெள்ளியம்பலம் திரும்பி வந்த செய்தியைச் சொல்ல!

முற்றும்.

சிறப்புச் சொற்பொழிவு
தென்பகுதி ரயில்வேமென் யூனியன் நிதிக்காக
மு. க ரு ணா நி தி
பேசுவார்
இடம் : சென்னை கோகலே மண்டபம்.
காலம் : 17-12-55 மாலை 5-30 மணி.
நன்கொடை : ரூ. 1—0—0, 0—8—0

விரைவில் ஆரம்பமாகிறது !

Filmed as bound

'இடைத் தரகர்' வேண்டாம்!

கடலூர் புதுநகரம்,
28—11—55

..சிரியர் அவர்களுக்கு,

27—11—55 இதழ் 'கல்கி'யில் ..ாப்பிள்ளை வருகிறார் மாலை ..யார்' என்று தலைப்பிட்டு 'கார் ..ன்' ஒன்று வெளியாகியுள்ளது. ..தில் தமிழ்ப் பெண் கையில் ..லையுடன் நிற்கிறாள்—தெலுங்கு, ..லையாளம், கன்னடம், துளுவம் ..கிய பெண்கள் ஒரு புறத்தில் ..கிறார்கள் — எதிரே இந்திக் ..ாரன் நிற்கிறான். தமிழ்ப் பெண், ..க்கு அக்கா தங்கைகள் வேண் ..ாம், இந்திக் கணவனே போதும் ..ன்று சொல்லுவதுபோல் சித்த ..கப்பட்டிருக்கிறது. எந்தத் ..மிழ்ப் பெண் கல்கியாரிடம் ..க்கு இந்திக் கணவன் வேண் ..மென்று சொன்னாளோ தெரிய ..லை. ஆனால் டில்லி ஆதிபத்தியக் ..ரர்கள் எப்படியும் தமிழுக்கு ..தியை கணவனாக்கிவிட வேண் ..மென்று முயற்சிக்கின்றனர். ..ரு முறை 'என்னைக் கணவனாக ..றுக்கொள்' என்று வந்த இந்தி ..ப்பிள்ளையின் முகத்திலே தார் .. அனுப்பினாள் தமிழ்ப் பெண். ..த்தை எண்ணையால் சமுவிக் ..ண்டு மறு முறையும் வந்து ..கிறான். ரஷ்யாவின் தலைவர்கள் ..கானினும், குருசேவும் தமிழ் ..ட்டிற்கு வந்தபோது, 'அவர் .. நான்தான் வரவேற்பேன்' ..ன்று சொல்லிக்கொண்டு வந்த ..தியை, 'என் வீட்டிற்கு வரும் ..ந்தினரை வரவேற்க நீ யார்?' ..று மண்டையிலடித்து விரட் ..ள். இந்த நிலையில்தான் எழுது .. கல்கி, 'மாப்பிள்ளை வருகி ..மாலை தயார்' என்று, குப்புற ..ந்தும் மீசையில் மண் ஒட்ட.. ..லை என்று சொன்னானாமே ஒரு .., அதுபோல! தமிழ்ப் பெண் ..ம் மாலை பெறலாம் என்று .. இந்தி மாப்பிள்ளை வரு ..ன். ஆனால் கிடைப்பது மாலை .., மண்டையடிதான்! 'புத்' ..ற நரகத்திலிருந்து மீள்வதற் .. கணவனின் வழியில் உள்ள ..று ஆடவர்கள்வரை கூடி ..னை பெறலாம் என்ற ஆசார ..ய பார்ப்பனர்கள் வேண்டு ..ல், உத்தியோகம் என்ற ..தையைப் பெறுவதற்காக ..யை கணவனாக ஏற்றுக் ..ள்ளலாம். ஆனால் 'மயிர் நீர்ப் உயிர்வாழாக் கவரிமான்'இனத் .. சார்ந்த தமிழச்சி நிச்சயமாக ..யை கணவனாக ஏற்றுக் ..ள்ள மாட்டாள். ஆச்சாரி ..ர ஒரு முறை குறிப்பிட்டார், ..தியை முதலில் பள்ளிக்கு ..ப்ப வேண்டுமென்று, அத் ..கய பக்குவமடையாத பாலக ..கு, 'கல் தோன்றி, மண் ..ன்று காலத்தே முன் தோன்றி ..தவளாம்' தமிழ்ப் பெண்ணை ..ாம் முடித்து வைக்க முயற்சிக் .. கல்கியார். கல்கியாரே! ..க்கு வேண்டாம் இந்த 'தரகு' ..லை என்று கூறிக் கொள்ளுகி ..ன்.

—இரா. தண்டபாணி.

★

பிறவிக் குணம்!

சென்னை,
27—11—55

..யர் அவர்களுக்கு,

..பத்தில், நேபாளத்தின் மன் .. அவர்தம் இல்லக் கிழத்தி ..சென்னைக்கு வருகை தந்த ..தி யாவரும் அறிந்ததே.

பல முக்கியமான வீதிகளில் அவர் அடிக்கடி சென்ற காரணத்தால், மற்ற போக்கு வரவு சாதனங்கள் தடைபடுத்தப் பட்டது பல மணி நேரங்கள். அதனால் பொதுமக்கள் இன்னல் பட்டனர். தங்களின் அவசர அலுவல்களுக்கு இடையூறு ஏற்பட்டது குறித்து பெருமூச்சு விட்டனர்!

இத்தனை ஆர்ப்பாட்டத்தோடு மன்னரும் வந்தார். இருமருங்கிலும் தேக்கி வைக்கப்பட்டிருந்த மக்கள் மன்னரைக் கண்டதும் மனிதப் பண்பை மறக்காமல் ஆர்வத்தோடு கை தட்டினர்! வாழ்த்துக் கூறினர், வணக்கம் செய்தனர்!

இவைகளை எல்லாம் மன்னர் கண்டார்! கடைக் கண்ணால் கவனித்தார்! தான் சென்றுக்கொண்டிருந்த வண்டியிலிருந்து எழுந்து நின்று வணக்கம் சொன்னாரில்லை! வணக்கம் சொல்லும் மக்களை மதித்தார் இல்லை! மனிதப் பண்பை உணர்ந்தாரில்லை!

இந்த முடி தாங்காத மன்னர், குடிமக்களின் பண்பை எப்படித் தான் அறிந்து ஆட்சி புரிகிறாரோ அறிய முடியவில்லை!

—நாகை, மன்னன்.

★

ஏன் இல்லை?

சென்னை,
29—11—55.

ஆசிரியர் அவர்களுக்கு,

தமிழகத்தில் பல திரைப்பட தியேட்டர்கள் இருக்கின்றன. ஆங்கிலப் படம் காட்டப்படும் தியேட்டர்களும், இந்திப் படம் காட்டப்படும் தியேட்டர்களும், தமிழ்ப் படம் காட்டப்படும் தியேட்டர்களும் இருக்கின்றன.

ஆங்கிலப் படம் காட்டப்படும் தியேட்டர்களில் செய்திப் படங்கள் ஆங்கிலத்திலேயே விமர்சிக்கப் படுகின்றது. அதுபோல இந்தி படம் காட்டப்படும் தியேட்டர்களில் இந்தியிலேயே விமர்சிக்கப் படுகின்றன. தமிழ்ப் படம் காட்டப்படும் தியேட்டர்களில் சென்னையை பொருத்தமட்டில் பெரும்பாலும் இந்தியிலேயே விமர்சிக்கப் படுகின்றது! ஏன் தமிழில் விமர்சிக்கக் கூடாது? அந்த தமிழ் உணர்வுகூட தியேட்டர் முதலாளிகளுக்குக் கிடையாதா?

—ர. மணி

★

நொண்டிச் சமாதானம்

சென்னை—14
29—11—55

ஆசிரியர் அவர்களுக்கு,

சென்னைக்கு விஜயம் செய்திருந்த சோவியத்தலைவர்களான புல்கானின் அவர்களையும், குருசேவ் அவர்களையும் பெரம்பூரில் இருக்கும் ரயில்வே தொழிற்சாலையை கொண்டுபோய்க் காட்டியிருக்கிறார்கள் நமது அருமை அகிம்சா மூர்த்திகள்!

மாஸ்கோ நகரத்தில் காணாத மாபெரும் தொழில் மனையை இங்கே கண்டோம் என்றா அவர்கள் நினைப்பார்கள்?

"இந்த நாட்டு எழில் வளங்களையும் இங்கே திகழும் உயர்ந்த எண்ணங்கொண்ட ஒப்புயர்வற்ற உங்களின் அன்பையும் கண்டு மகிழ்கிறோம்" என்று சொன்ன அந்த தலைவர்களுக்கு, நாம் காண்பிக்க வேண்டிய எழில் மாடங்களையும், எண்ணற்ற ஏழைகள் அவதிப்படும் காட்சியையும் காட்டவில்லை! கருகிக் கொண்டிருக்கும் ஏழைகளின் வாழ்வு அந்தத் தலைவர்களின் கண்களிலிருந்து மறைக்கப்பட்டுவிட்டது!

போதிய காலம் கிடையாது என்று சமாதானம்காட்டி நம்மை ஏய்க்கப் பார்க்கிறார்கள் இந்த ஆட்சியாளர்கள்!

—பொ. முனுசாமி.

வெற்றி யாருக்கு?

பொதுவாழ்வில் பணியாற்றும் ஒருவர் எனக்கு நண்பர். அவர் சேவையைக் குறித்து பலர் குறை கூறுவார்கள்: ஒரு நாள் நான் அவரைப் பார்த்து, "பலர் உங்கள் சேவையைக் குறித்து குறை கூறுகிறார்களே, இத்தனை குற்றச் சாட்டுகளையும் எப்படி பொறுத்துக் கொள்ளுகிறீர்கள்" என்று கேட்டேன்.

"தோழரே—உங்களைச் சுட்டிக் காட்டி யாராவது குற்றம் சாட்டும்போது அவர் கை, என்ன செய்கிறது, என்பதை கவனித்திருக்கிறீர்களா, என்றார்.

"கவனிக்கவில்லை" என்றேன்.

"சரி—என்னைக் குற்றம் சாட்டும் தோரணையில் உங்கள் விரலால் என்னைச் சுட்டிக் காட்டுங்கள்" என்றார்.

ஒரு விரலால் நான் அவுரைச் சுட்டிக் காட்டினேன்:
"நண்பரே! ஒரு விரல் என்னைச் சுட்டிக் காட்டுகிறது; உங்கள் கையை நன்றாகப் பாருங்கள், மூன்று விரல்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றன" என்று கேட்டார்.

"மூன்று விரல்கள் என்னையே சுட்டிக் காட்டுகின்றன" என்றேன்.

"ஒன்றுக்கு எதிரே மூன்று! வெற்றி எனக்குத்தானே" என்றார் நண்பர்.

நான் அங்கு நிற்கவில்லை.

—டாக்டர் நார்மன் வின்சென்ட் பீல்.

கடிதக் குறிப்புகள்.

வேத விற்பனர்கள் என்றும்—உபநிஷத்தின் சாரத்தை அறிந்தவர்கள் என்றும் தங்களை பறைசாற்றிக் கொண்டு தமிழகத்திலே உலவும் சில மத போதகர்களின் 'எம்மதமும் சம்மதமே' என்ற உபதேசம் வெறும் வெளிவேஷம் என்றும், அதற்கு எடுத்துக் காட்டாக, பேரூர் கடாம்பாடியில் ஒரு இந்து ஆலயம் இருக்கிறது என்றும், 'தீண்டாமை, தீயினும் கொடிது' என்று கூறிடும், சர்க்காரின் மேற்பார்வையில் அந்த ஆலயம் இருப்பதாகவும், அந்த ஆலயத்தின் நிர்வாகிகள், 'இந்து மதம் அல்லாத பிறமதத்தினர் உள்ளே பிரவேசிக்கக்கூடாது' என்று அந்த ஆலயத்தில் எழுதி வைத்திருப்பதாகவும் குறிப்பிட்டு, தீண்டாமை பற்றிய சர்க்காரின் சட்டத்தையும் 'எம்மதமும்—சம்மதமே' என்ற சமரச மொழியையும், பொய்யாக்கிவிட்ட அந்த கோவில் நிர்வாகிகள், இன்றளவும் சட்டத்தின் கண்களுக்கு படாமல் இருப்பது—வேடிக்கை நிறைந்த வேதனையான சம்பவம், என்று, பேரூர் கடாம்பாடி கா. சி. இராமசாமி என்பர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

★

இந்துபூர் எஸ். ஏ. .. போலீசை சேர்ந்த தோழர்கள் தீட்டியுள்ள கடிதமொன்றில்—தமிழகத்திலே பிறந்து, தமிழ் பண்பாட்டிலே வளர்ந்து, தமிழகத்திலே போலீஸ் வேலை பார்த்து வந்த சுமார் 600 தமிழர்களை, ஆந்திர மாநிலப் பிரிவின்போது, சென்னை சர்க்கார், ஆந்திரத்திற்கு மாற்றி விட்டதாகவும், மந்திரி சுப்பிரமணியம் கர்னூலுக்குவிஜயம்செய்தபோது அவர்கள் முறையிட்டுக் கொண்டதில்—நிவாரணம் அளிப்பதாக சொல்லிவிட்டு திரும்பிய அமைச்சர், வாக்குறுதியை மறந்துவிட்டதாகவும், மனைவி—மக்கள், மழலைச் செல்வங்களை தமிழகத்தில் அலையவிட்டு, 32 ரூபாய் சம்பளத்திற்காக, 95.. மைல்கள் கடந்து வந்து தவிப்.. பயங்கரக் கொடுமையாக ..ருப்பதாகவும்—சர்க்கார், தங்.. கண்ணீருக்கு ஆறுதல் அளி.. வேண்டுமென்றும்—வருத்தத்து..ன் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

★

எரிமலை குமுறுது!--

ஏகாதிபத்யம் சாயுது!

இந்திய உபகண்டத்து அரசியலார், சிக்கல்களைத் தீர்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடு உண்டாக்குகின்ற கமிட்டிகள், உள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்கு மாருக — புதிய சிக்கல்களை சிருஷ்டிப்பதோடு பின் அவைகளைத் தீர்ப்பதற்கு வேருெரு கமிட்டியையும் அமைக்க வேண்டிய சூழ்நிலையை உண்டாக்கி வருகிறது.

ஜவுளித் தொழிலுக்கு, நூல் சப்ளை செய்வதற்கு 'அம்பர் சர்க்காவிற்கு' ஆக்கமளிக்கும் பிரச்சனையில் பாராளு மன்றத்தில் கூடிய காங்கிரஸ் பார்லிமெண்டில் கருத்து வேறுபாடுகள் எழுந்துள்ளன.

மூன்று மந்திரிகள் மாறுபட்ட கருத்தினைத் தெரிவித்திருக்கிருர்கள்.

கைத்தறிக்குத் தேவையான நூல் உற்பத்திக்கு 'அம்பர் சர்க்கா' என்ற ஒரு சர்க்காவின் உபயோகத்தை விரிவு படுத்த வேண்டும் என்பதுதான் கார்வே கமிட்டியின் அறிக்கையின் சாரம.

கார்வே கமிட்டியின் இந்த சிபார்சை குல்சாரிலால் நந்தா ஆதரித்திருக்கிருர்.

கார்வே கமிட்டியின் சிபார்சு அமுலாக்கப்பட வேண்டுமென்றும் அப்படி செய்யத் தவறினுல் ஆலைகளின் நூற்பு சக்தியை வளரவிடக் கூடாது என்றும், புதிய கதிர்கள் அனுமதிக்கப்படக் கூடாது என்றும் குல்சாரிலால் நந்தா கூறியுள்ளார்.

தொழில் வர்த்தக மந்திரியான டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், அதிகரித்து வரும் நூல் தேவையை சமாளிக்க அதிகப்படியான கதிர்கள் வழங்கப்பட வேண்டும் என்றும், உணவுத் தேவையைப்போல் மிகவும் அவசியமான தேவை ஜவுளிப் பிரச்சனை என்றும், அம்பர் சர்க்காவில் தயாரிக்கப்படும் நூல் கைத்தறிக்குப் பயன்படாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், அம்பர் சர்க்காவிற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ 30 கோடி மானயம் உதவி தர வேண்டுமென்று தொழில் இலாகா நிபுணர்கள் மதிப்பிடுவதாகவும், அம்பர் சர்க்கா விஷயத்தில் 150 கோடி ரூபாய் செலவிடுவது பயனற்றதுஎன்ற பொருள் படவும் தமது முடிவை டி. டி. கே. அறிவித்துள்ளார்.

அமைச்சர் அவையில், கைத்தறி நெசவுத் தொழில் குறித்து குல்சாரிலால் நந்தாவிற்கும், டி. டி. கிருஷ்ணமாச்சாரியாருக்கும் பலத்த நேர்முரணை கருத்து வேறுபாடுகள் எழுந்துள்ள இந்த நிகழ்ச்சி, டெல்லி வட்டாரத்தில் ஒரு பரபரப்பை உண்டாக்கிவிட்டிருக்கிறது.

அம்பர் சர்க்காவை விரிவு படுத்த வேண்டுமென்ருல், ஆலைகளின் நூற்பு சக்தியை அதிகரிக்க விடக்கூடாது, புதிய கதிர்களை அனுமதிக்கக்கூடாது —இது திட்ட மந்திரி குல்சாரிலால் நந்தாவின் கருத்து.

நாட்டில் வளரும் பொருளாதார நிலையைச் சுட்டிக் காட்டி, அம்பர் சர்க்கா இன்னும் ஆராயப்படவேண்டிய ஒருபிரச்சனையாக இருப்பதால், அதை நம்புவதில் பயனில்லை, என்றும், அம்முறையைப் பின்பற்றுவதால் லாபகரமான சூழ்நிலை ஏற்பட இடமில்லை என்றும் தெளிவாக விளக்கி இருக்கிருர்.

தொழிலமைச்சரின் கருத்துக்கள் புதிய உலகை நோக்கி நடப்பதையும்—

குல்சாரிலால் நந்தாவின் அபிப்பிராயங்கள், தொழிலமைச்சரின் கருத்துக்களுக்கு எதிர் நடையாக தோற்றமளிப்பதையும் உணரலாம்.

இன்று உலகநாடுகள் இந்திய உபகண்டத்தைவிட பொருளாதாரத் துறையில்,முன்னணியில் நிற்பதற்குக் காரணம், அவைகள்புத்தம்புதிய தொழில்துறை நுட்பங்களையும்,பொருளாதார நிபுணர்களின் புதிய கருத்துக்களையும், நவீன யந்திர சாதனங்களையும் பின்பற்றுவதுதான் முதல் காரணமாகும்.

அறிவியலின் வளர்ச்சிக்கேற்ப தொழில் துறையில் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. மற்ற நாடுகள் அந்த மாற்றங்களை செயல்படுத்துவதில் முந்திக் கொள்வதால்-தொழில் உற்பத்தியிலாகட்டும், பொருளாதார வளர்ச்சியிலாகட்டும், தலை நிமிர்ந்து பீடு நடைபோட முடிகின்றது.

நந்தாவின் கருத்தை கூர்ந்து நோக்கினுல், அதிலே ஒரு உட்பொருள் புதைந்திருப்பதையும் தெளிவாக புரிந்துகொள்ள முடிகிறது.

தென்னுட்டுக் கைத்தறியாளர்கள் தங்களுக்குத் தேவையான நூல்களுக்கு பம்பாய் ஆலைகளை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது,தங்களுக்கு தேவையான நூலுக்கு வடநாட்டு ஆலைகளை எதிர்பார்க்க வேண்டிய நிலையை தவிர்க்க, தென்னாட்டு ஆலைகள் பல நூற்பு கதிர்களை அதிகரிக்க அனுமதி கோரியுள்ளன. இந்த தென்னுட்டு ஆலைகளின் கோரிக்கையை மறைமுகமாக மறுக்கின்ற முயற்சிதான, 'புதிய கதிர்கள்' இயங்க அனுமதிப்பதை தடுக்க வேண்டும் என்ற நந்தாவின் கருத்து.

'அம்பர் சர்க்கா' விலே 'அக்கறை' காட்டுவதாக இருக்கின்ற நந்தாவின் நடிப்பு— பம்பாய் ஆலைகளின் வளர்ச்சியை 'மனதில்' கொண்டதின் விளைவுதான் என்று நாம் கூறுவதை யாராலும் மறுக்க முடியாது!

தென்னுட்டில் நூற்பு கதிர்கள் வளர்ந்துவிட்டால், தென்னுட்டு நெசவாளர்கள் பம்பாய் நூலுக்காக காத்துக் கிடக்க வேண்டிய நிலை ஏற்படாது. இதனுல் பம்பாய் ஆலைகளின் ஏகபோக ஆதிக்கம்குறைகின்ற நிலை ஏற்பட்டுவிடும். இந்த நிலையை தவிர்க்கத்தான், கார்வே குழுவினரின் சிபார்சை சாதகமாக்கிக் கொண்டு 'அம்பர் சர்க்கா' என்ற சூழ்சி நிறைந்த திட்டத்தை புகலிடமாகக் கொண்டு—தென்னுட்டு ஆலைகளுக்கு புதிய கதிர்கள் அனுமதிக்கக் கூடாது என்று குரல் எழுப்புகிருர் குல்சாரிலால் நந்தா—என்பது தெளிவாக விளங்குகிறது.

ஓயாமல் கூச்சல் எழுப்பும் ஆலைகளையும், வான மண்டலத்தை இருளாக்குகின்றஅளவிற்கு கரும்புகை கக்கிக் கொண்டிருக்கும் இயந்திர சாதனங்களையும், நாளுக்கு நாள் வடநாட்டிலே பெருக்கிக் கொண்டு—குடிசைத் தொழில் வளரவேணடும்என்று கூறுவதில் தூய்மையான எண்ணம இருப்பதாகவும்—உள்ளபடியே, குடிசைத் தொழில் வளர்ச்சியில் நல்லெண்ணம் இருப்பதாகவும் தெரியவில்லை.

ஒரு மணிக்கு பல ஆயிரம் சிட்டங்கள் என்ற விதத்திலே உற்பத்தி செய்யும் யந்திர சாதனங்களை வடபுரத்திலே வளரவிட்டு, நாளெல்லாம் உழைத்தாலும் ஓரிரண்டு சிட்டங்கள்— அதுவும் தரத்தில் குறைந்து காணப்படும் பயன்படாத ரகத்தை உற்பத்தி செய்யும் 'சர்க்கா'க்களை, இங்கே வளரவிட வேண்டுமென்பதிலே எடுத்துக்கொள்ளும் முயற்சியை, நாணயமுடயது — நல்லெண்ணத்தை அடிப்படையாகக் கொண்டது என்று நாம் எப்படி ஒப்புக்கொள்ள முடியும்.

குடிசைத் தொழிலை வளர்ப்பது என்ற பெயரால்—தென்னகத்தை வரண்ட நாடாக்கி தொழில் வளர்ச்சியில் உலகத்தின் நோயாளியாக்கி வைத்திருப்பதற்கு செய்யப்படும் சூழ்ச்சி, என்று நாம் குறிப்பிட்டால் யாரும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

அமைச்சர் அவையிலே டி. டி. கே. எழுப்பிய குரல் இந்த குமுறலை அடிப்படையாகக் கொண்டு தான்—எழுந்திருக்க வேண்டும்.

நூல் உற்பத்தி தொழில் மட்டுமல்ல, இயந்திர தொழில் வளர்ச்சியில் வடநாட்டையும்—தென்னுட்டையும் நிறுத்துப் பார்த்தால், வடநாட்டு பக்கம் தாழ்ந்திருப்பதையும் – தென்னுட்டு தட்டு உயர்ந்திருப்பதைதையும் அறியலாம்.

இயந்திர சாதனங்களின் வளர்ச்சியென்ற கண்கொண்டு நோக்கும்போது வடக்கே தொழிற் புரட்சியும், தெற்கே வறண்ட காட்சியும் தானே தென்படுகிறது. இந்த நிலையில் நந்தா போன்றவர்களின் 'ஆடுராட்டே' கீதத்தால் பாதிக்கப்பட வேண்டிய பகுதி தென்னகம் என்பதைத் தவிர வேறு என்ன கூறமுடியும்.

வடக்கிலே வளருகின்ற தொழிற்புரட்சிக்கும், இயந்திர உற்பத்திக்கும், தென்னுடு மார்கெட்டாக இருக்க வேண்டுமென்று அவர்கள் கருதுவதால் 'அம்பர் சர்க்கா' போன்ற குடிசை தொழில்களின் வளர்ச்சியில் நந்தா போன்ற 'நல்லெண்ணம்' படைத்தவர்களுக்கு அளவிற்கு மீறிய அக்கரை இருக்கிறது என்று நாம் சுட்டிக் காட்டுவதை மறுக்க முடியுமா?

தொழில் துறையில் ஆசியாவின் நோயாளியாகத் தெக்கணத்தை வைத்திருக்க வடநாட்டு பண முதலைகள் செய்திடும் சதி தான், குடிசைத் தொழில் வளர்ச்சி என்ற மயக்கு மொழி என்று நாம் கூறுவதை மறுத்து காரணம் காட்ட முடியுமா?

தெக்கணத்து துறைமுகங்களின் மணற்பரப்புகளில், ரோமரும், யவனரும்—கிரேக்கரும்-சீனரும் காத்துக் கிடந்த நிலை தலைகீழ்மாற்றம் அடைந்ததேன்?

நிலத்திலே தேக்கி வைக்க இடமில்லாக் காரணத்தால், பட்டையும் — பொன்னையும்— பருத்தியையும் — கடலிலே மிதக்கவிட்டு அயல் நாடுகளுடன் வாணிபம் நடத்திய திராவிடத்தின் இன்றை நிலைஎன்ன?

நாளுக்கொரு ஆலையை வடநாட்டிலே வளர விட்டுக் கொண்டு 'ஆடுராட்டே சுழன்ருடு ராட்டே' என்று அம்பர் சர்க்காக்களை சுழற்றிக் கொண்டிருப்பதுதானு?

★ தொடர்ச்சி 12-ம் பக்கம்

தி. மு. கழக உறுப்பினர் சேர்த்தல்

1\. திராவிட முன்னேற்றக் கழகத்தின் பழைய உறுப்பினர்களைப் புதுப்பிப்பதற்கும், புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கும் உரிய காலமாக, 1955 டிசம்பர்—1956 சனவரி ஆகிய இரண்டு திங்கள்களும் தேர்ந்தெடுக்கப் படுகின்றன.

2\. இப்பொழுதுள்ள உறுப்பினர்கள் 1956 சனவரித் திங்கள் 31-ம் நாளுக்குள் தம் உறுப்பினர் தகுதியைப் புதுப்பித்துக் கொள்ளவேண்டும். அதற்குள் புதுப்பித்துக் கொள்ளாவிட்டால் 1956 பிப்ரவரி 1-ஆம் நாளிலிருந்து தி. மு. கழக உறுப்பினர் தகுதியை அத்தகையோர் இழந்துவிட்டதாகக் கருதப்படுவர். அதற்குப் பிறகு சேர்பவர்களுக்குப் பழைய உறுப்பினர் தகுதி சேர்த்துக் கணக்கிடப்பட மாட்டாது; புதிய உறுப்பினர் என்ற முறையிலேயே நோக்கப்படுவர்.

3\. உறுப்பினரைப் பதிவு செய்யும் விண்ணப்பத் தாள்களை அந்தந்த மாவட்டக் கழகங்களிலிருந்து அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த கிளைகள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4\. கிளைக் கழகம் தோற்றுவிக்கக்கூடிய, ஆனால் இதுவரையில் தோற்றுவிக்காத இடத்தில் (சிற்றூர் அல்லது பேரூர் அல்லது நகரம்) முக்கியமான ஒருவர் பொறுப்பாளராக இருந்து பக்கத்துக் கிளைக் கழகச் செயலாளர், அல்லது அருகிலுள்ள மாவட்டப் பிரதிநிதி, அல்லது அருகிலுள்ள பொதுக் குழு உறுப்பினர் ஆகிய ஒருவரின் அறிமுகத்தின் பேரில் விண்ணப்பத் தாளை மாவட்டச் செயலாளரிடமிருந்து பெற்று, உறுப்பினர்களைச் சேர்த்துத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவிட்டுப் பிறகு கிளைக் கழகம் அமைத்துக் கொள்ளலாம்

5\. கிளைக் கழகம் அமைக்கக் குறைந்தது 25 உறுப்பினர்கள் வேண்டும். கிளைக் கழகம் அமைக்க முடியாத இடத்திலுள்ளவர்கள், பக்கத்திலுள்ள ஏதேனும் ஒரு கிளைக் கழகத்தில் உறுப்பினராகத் தம்மை இணைத்துக் கொளளலாம்.

6\. கிளைக் கழகச் செயலாளரும். கிளைக் கழகம் இல்லாத ஆனால் அமைக்கக் கூடிய இடத்தில் முக்கிய பொறுப்பாளருந்தான் உறுப்பினர்களைப் பதிவு செய்ய வேண்டும்.

7\. ஒவ்வொரு விண்ணப்பத் தாளிலும் இருபத்தைந்து உறுப்பினர்களைப் பதிவு செய்யலாம். ஒவ்வொரு கிளைக் கழகமும் எவ்வளவு உறுப்பினரைத் தம் ஊரில் சேர்க்க முடியும் என்று எண்ணுகிறதோ அவ்வளவு உறுப்பினருக்குத் தேவையான பதிவுத் தாள்களை மாவட்டக் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

8\. ஒவ்வொரு உறுப்பினரும் உறுப்பினர் கட்டணமாக அணா 8 செலுத்த வேண்டும். ஒவ்வொரு உறுப்பினரும் செலுத்தும் எட்டு அணாவில் நான்கு அணாவைக் கிளைக் கழகம் வைத்துக் கொண்டு மீதி நான்கு அணாவை தலைமைக் கழகத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும். மாவட்டக் கிளைக்குச் சேரவேண்டிய தொகையைத் தலைமைக் கழகம் பிறகு கணக்குப் பார்த்து அந்தந்தந்த மாவட்டக் கிளைகளுக்கு அனுப்பிவைக்கும்.

9\. உறுப்பினர் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பத் தாளையும், தலைமைக் கழகத்திற்குச் சேரவேண்டிய தொகையையும் (பாதிக் கட்டணத் தொகை) பொதுச் செயலாளர், தி. மு. கழகம், அறிவகம். இராயபுரம், சென்னை—13 என்ற முகவரிக்கு கிளைக் கழகச் செலவில் அப்படியே அனுப்பி வைக்க வேண்டும்.

10\. விண்ணப்பத் தாளும். கட்டணத் தொகையும் வந்து சேர்ந்தவுடன் உறுப்பினர் உரிமைச் சீட்டுக்கள் தலைமைக் கழகத்தால், கிளைக் கழகத்தின் மூலம் உறுப்பினருக்கு அனுப்பிவைக்கப்பெறும். உறுப்பினர் உரிமைச் சீட்டை, உறுப்பினர், சான்றுக்காக என்றென்றும் வைத்துக் காப்பாற்றி வைக்க வேண்டும்.

11\. கிளைக் கழகத்தில் வைத்துக் காப்பாற்றப்பட வேண்டிய சீட்டுக்களும், மாவட்டக் கழகத்தில் வைத்துக் காப்பாற்றப்பட வேண்டிய சீட்டுக்களும் அவ்வப்போது அனுப்பி வைக்கப் பெறும்.

12\. பின்னால் எப்பொழுதாவது ஒரு கிளைக் கழகத்திலிருந்து மற்றொரு கிளைக் கழகத்திற்குத் தக்க காரணங்களோடு தம்மை மாற்றிக்கொள்ள விரும்புபவர்கள், உறுப்பினராய் இருக்கும் கிளைக் கழகச் செயற்குழுவின் அனுமதிச் சீட்டோடு, தனியே நான்கு அணாவை தலைமைக் கழகத்திற்குச் செலுத்தி மாற்றிக் கொள்ள வேண்டும்.

13\. எந்தக் கிளைக் கழகமும் புதிய தேர்தல் நடத்தக் கூடாது. உறுப்பினர் சேர்க்கும் பணி மட்டுந்தான் இப்பொழுது நடைபெற வேண்டும்.

14\. பதினெட்டு வயதிக்கு மேற்பட்ட ஆண்கள்-பெண்கள் மட்டுமே தி. மு. கழகத்தில் உறுப்பினராகும் தகுதியடைந்தவராவர். மாணவர்கள் தி. மு. கழகத்தில் உறுப்பினராக வேண்டாம். அவர்கள் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

"அறிவகம்,"
சென்னை-13
6-12--1955

இரா. நெடுஞ்செழியன்
பொதுச் செயலாளர், தி. மு. கழகம்.

பொன்முடியின் கடிதம்...

★ 2-ம் பக்கத் தொடர்ச்சி

உறக்கம், இம் மூன்றைத்தவிர உருப்படியான காரியங்களில் ஈடுபடுவதில்லை;

மாதம் 400; நாளொன்றுக்கு அலவன்சு என்ற பெயரால் ரூ. 25; முதல் வகுப்பு இரயில் பயணச் சீட்டு; எல்லாம் வரிப் பணம்தான்!

என்றாலும் இந்த தற்காலிக இன்பத்தில் தலையிட நாம் விரும்பவில்லை; அதே நேரத்தில் மக்களுக்காக இவர்கள் செய்யும் 'பணி' ஊர் சுற்றித் திரிவதும்-ஊமையாகிக் கிடப்பதும் தானா, என்று கேட்க கடமைப் பட்டிருக்கிறோம்.

'லோக்சபா' அந்த மாணவர் குறிப்பிட்டதுபோல — ஒரே கட்சியின் செல்வாக்கு பெற்றிருந்தும்கூட, சர்க்கார் தோல்வியுற்றது என்பது சர்க்காருக்கு மட்டுமல்ல-சர்க்காரை நடத்துகின்ற கட்சியின் சார்பிலே எம். பி. களாக சென்றுள்ள, 'சுகவாசி'களுக்கும் இழிவுதரக் கூடிய சம்பவமாகும்!

பார்லிமெண்டில் அடிக்கடி 'கோரம்' இல்லாத நிலைமையை உண்டாக்கி கடமை உணர்ச்சியையும்—பொறுப்பையும் மறந்து, சுகவாசிகளாக உலவிக் கொண்டிருக்கும், பாராளுமன்ற காங்கிரஸ் உறுப்பினர்களின் இந்ததரக் குறைவிற்கு அலட்சிய மனப்பான்மை என்பதைத் தவிர வேறு என்ன காரணம் காட்ட முடியும்?

'லோக் சபா'வை 'ஷோக் சபா'வாக்கிக் கொண்டு சுற்றித் திரியும் சுகபோகிகளுக்கு, வருகின்ற தேர்தலில் மக்கள் பாடம் கற்பிக்கத் தவறமாட்டார்கள் என்பதை நாம் நினைவு படுத்திக் கொள்ள வேண்டும்.

குமார், மாணவ சமுதாயத்திடையே இருக்கும் தரக் குறைவை ஒப்புக் கொண்டு — மாற்றத்திற்கு முயலவேண்டுவது எவ்வளவு அவசியமோ-அதைவிட, இந்த மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பற்ற தன்மை மாறி கடமை உணர்ச்சி ஏற்படுவதும் அவசியமில்லையா?

அன்புள்ள,
பொன்முடி

முகவரி மாற்றம்

திராவிடன் அலுவலகம் சோமு அச்சகம்

1-12 55 முதல் கீழ்கண்ட முகவரிக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

'திராவிடன்'

16 99 அம்மன்கோயில் தெரு.
வால்டாக்ஸ் ரோடு, சென்னை-1

பிறைவானம்...

★ 11-ம் பக்கத் தொடர்ச்சி

'அப்பா, அப்பா. நம்ம கந்தன் இல்லே'ப்பா. கந்தன், இந்தக் கடிதத்தை கொடுத்துட்டுப் போயிட்டான் அப்பா'—என்றவாறு கடிதத்தைக் கொடுத்தான் சேகர். 'அப்படியா?'என்று அதை வாங்கிப் படித்தார்:

அன்புடையீர்!

சாதியிலே உயர்ந்தவர்கள்; உயர்ந்தவர்கள் என்று மெச்சுவீர்களே அந்த உயர்ந்தவர்கள் செய்த இழிவான செயலைப் பார்த்தீர்களா? சாதியிலே தாழ்ந்தவன்தான் நான். ஆனால், உயர்ந்த எண்ணமுடையவன். சாதிகள் இல்லை. அது 'சதி!' என்று இப்பொழுதாகிலும் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

என்னை ஆதரித்தவரே, நீங்கள் அன்று உங்கள் கைப் பிரம்பால் அடித்த வடு என் உடம்பைவிட்டு மறைந்தாலும்என் நெஞ்சைவிட்டு அது இன்னும் மறையவில்லை நான் வாங்கிய உதைக்கு சேகர்—தான்—உங்கள் மகன்தான் அழுதான். நான் அழவில்லை. இரக்கம்—அன்பு—கடமை-கண்யம் இவை அனைத்தும் பொருந்தியவன் சேகர். அவனுடைய பிஞ்சு உள்ளத்திலே 'சாதி' என்னும் நஞ்சைத் தூவி விடாதீர்கள். அவன் உயர்ந்தவன். அவன், அவனுடைய பாதையில் நடக்கட்டும். கெடுத்துவிடாதீர்கள். இதுதான் என் வேண்டுகோள். அனாதையாக வந்த என்னை ஆதரித்த உங்களுக்கு என் நன்றி. நான் அனாதையாகவே போகிறேன்.

அன்பை மறவாத
அனாதைக் கந்தன்.

படித்து முடித்தார். அவர் கண்களிலேயிருந்து இரு சொட்டு கண்ணீர் விழுந்தது. அவர் வெளியே வந்து பார்த்தார். அப்பொழுதுதான் கந்தன் ஊன்றுகோலை ஊன்றிக்கொண்டு நொண்டி நொண்டி தெருமுனையைக் கடந்து கொண்டிருந்தான். அனாதையாக வந்தவன் அனாதையாகவே போகிறான். சேகர் அழுதே விட்டான். அவனை அணைத்துக் கொண்டார் அவர்.

அதற்குப் பிறகு—

விடுதி வாசலிலே, 'கந்தன் அனாதைச் சிறுவர்கள் விடுதி!' என்ற புதுப் பலகை மாட்டப்பட்டது. அன்று முதல் எல்லா சிறுவர்களுக்கும் உடையிலே—உணவிலே—படுக்கையிலே வித்தியாசமே இல்லை.

— ந. கண்ணன்.

செங்கற்பட்டு தி. மு. க. மாநில மாநாட்டு நிதிஅளிப்பு கூட்டம்

செங்கற்பட்டு தர்கா திடலில் 11-12-55 ஞாயிறு மாலை6-மணிக்கு. செ. மாவட்ட செயலாளர் கே. டி. எஸ். மணி அவர்கள் தலைமையில் பொதுச் செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., தோழர் காஞ்சி கலியாணசுந்திரம். தோழியர் சத்தியவாணி முத்து ஆகியோர் பேசுவார்கள்.

பிறை வானம்

...பிள்ளைகள் பகுதி...

'சாதிகள் இல்லையடி, பாப்பா'

'அனாதைச் சிறுவர்கள் விடுதி' –இந்தக் கொட்டை எழுத்துக்கள் கந்தனின் கண்களில் பட்டன. அனாதையாகத் திரிந்த சிறுவன் கந்தனுக்கு அதைக் கண்டதும் மூங்கிலைக் கண்ட முல்லைக் கொடி போல இருந்தது. அடுத்த கணம் அவன் கால்கள் அந்த விடுதிக்குள் புகுந்தன. எதிரே—

மிடுக்கான ஒருவர் கந்தனைத் தடுத்தார். 'என்னவேணும் தம்பி?' என்றார் அவர். அவருடன் ஒரு சிறுவன் நின்றிருந்தான். அவன் தான் அவருடைய மகன் சேகர்.

'நான் அனாதைங்க'—பதில் கூறினான் கந்தன்.

'உம்...உம்...உன் பேரென்ன? வயது...?'

'கந்தனுங்க, வயது பதினாலுங்க'

'ஜாதி?' அவர் கேட்டார். அவன் விழித்தான். ''அட, பொல்லாத உலகமே! எங்கு போனாலுமா சாதி!—இந்த அனாதை விடுதியிலும் சாதியா?'' — என்று எண்ணினான் கந்தன்.

'ஐயா! எனக்கு என் சாதி என்னன்னு தெரியாதுங்க. எங்கப்பாவுக்கு செருப்பு தைக்கிற தொழிலுங்க; அவரு அந்த வேலையை எனக்குக் கத்துக் கொடுக்காமலே செத்துப் போய்ட்டாருங்க'–கண்களிலே கண்ணீர் வடியக்கூறினான், கந்தன்.

கடைசியில் அவன் அந்த அனாதைச் சிறார் விடுதியிலேசேர்ந்தான். எட்டாம் வகுப்பிலே சேர்ந்த அவன் எதிலும் முதல்வனாக இருந்தான். சாதியில் தாழ்ந்தோருக்கு படுக்கை, உடை, உணவு எல்லாம் ஒருவிதம் — உயர்ந்தவர்க்கெல்லாம் ஒருவிதம். இந்த வித்யாசம்தான் அவனை ஆட்டிப் படைத்தது..

ஒரு நாள் மாலை—

விளையாட்டு மைதானத்தில் கந்தனின் கோஷ்டி கால்பந்து விளையாடிக் கொண்டிருந்தது. அப்பொழுது—

'கந்தா' என்ற குரல் கேட்டுத் திரும்பினான். அவனைக் கூப்பிட்டது வேறு யாருமல்ல; விடுதி அதிகாரியின் மகன்தான்.

'என்ன சேகர்?' என்றான் கந்தன்.

'நானும் உங்களுடன் சேர்ந்து விளையாடலாமா?' என்றான் சேகர்.

'ஓ, அதுக்கென்ன!' என்று சொல்ல வாயெடுத்தவன், 'வேண்டாம் சேகர். நாங்களோ தாழ்ந்தவர்கள்; நீ எங்களுடன் சேர்ந்து விளையாடுவதை இங்குள்ள யாவரும் வெறுப்பார்கள்' என்றான்.

'அதெல்லாம் முடியாது. நான் உங்களுடன்தான் விளையாடுவேன்! இல்லேன்னா எங்கப்பாவிடம் சொல்லிவிடுவேன்' என்று அழ ஆரம்பித்தான், சிறுவன் சேகர்.

வேறு வழியில்லாமல் சேகரையும் சேர்த்துக்கொண்டு விளையாட ஆரம்பித்தான், கந்தன்.

தங்களுடன் விளையாடிக்கொண்டிருந்த சேகர், ஏழை கந்தனுடன் சேர்ந்து விளையாடுவதைக் கண்ட உயர்தர மாணவர்களுக்கு ஏனோ பொறாமை. அதிலும் வெங்கிட்டு என்ற பையனோ கந்தனுக்கு விரோதி, அவன் சும்மா இருக்கவில்லை. இந் விஷயத்தை சேகரின் அப்பாவின் காதுக்கு எட்டச் செய்தான். அவ்வளவுதான்; அவர் சிம்ம சொரூபமானார். கையிலே பிரம்புடன் காட்சியளித்தார் கந்தன் எதிரே. அவனுடைய தலைமுடியை அவர் இடதுகை பிடிக்க, வலது கையிலிருந்த பிரம்பு கந்தனின் முதுகிலே 'சுரீர்...சுரீர்' என்று விளாசிவிட்டு ஓய்ந்தது. அதைத் தொடர்ந்து 'ஐயோ, அப்பா' என்று ஆதரவற்ற கந்தன் அலறினான்.

'அனாதையா வந்தானேன்னு ஆதரவு தந்தா, அளவுக்கு மிஞ்சியா போயிட்டே, ராஸ்கல்! என் மகன் உன்னுடன் சேர்ந்து விளையாடுவதா?...'—தொடர்ந்தார் அவர்.

'அவனேதானுங்க விளையாட வந்தான்'—அலறினான் கந்தன்.

'அவனே வந்தா, நீ எப்படியடா சேத்துக்கலாம்?...மடையா! இனிமே இப்படியெல்லாம் நடந்தே தோலை உறிச்சுடுவேன். ஆமா' –அதிகாரி அதிகாரமாகப்பேசினார்.

'சரிங்க...'—என்றான் கந்தன்.

★

மாலை மறைந்தது; இரவு வந்தது.

'கந்தா, என்னாலல்லவா நீ உதைப் பட்டாய்?'

'சேகர், நேசத் தென்றல் நீ— ஆனால், அப்பப்பா — உன் தந்தையோ எரிமலை! அதனால் வந்த விளைவுதான் என் உடம்புகளிலே இருக்கும் தழும்பு. நீ என்ன செய்வாய், போய் படு!'

'கந்தா, உன்னுடனேயே பேசிக் கொண்டிருக்கலாம்— இங்கேயே படுத்துக் கொள்ளலாம் என்று தோன்றுகிறது?'

'சேகர், அதோ ஊர்க் கோடியிலே தெரிகிறதே சேரி, அங்கே பார்! தாழ்ந்த குடிசைகள்தான்— ஒளிதரும் நிலவு சில்லென வீசும் தென்றல் காற்று—அமைதியான இடம்—அதைக் கலைக்க பூச்சிகளின் ரீங்காரம்–இதெல்லாம் அங்கே இயற்கை! ஆனால், இதோ பக்கத்திலே பார்! உயர்ந்த மாளிகைதான்–உள்ளே பாதரசவிளக்கு நிலவுக்குப் போட்டி போடுகிறது– மின்சார விசிறி தென்றலுக்கு சவால் விடுகிறது. அமைதியைக் கிழிக்க பாடும் ரேடியோ பக்கத்திலே!—இவை முழுதும் செயற்கை! மனிதன் செயற்கையைவிட இயற்கையை விரும்புவதில் ஆச்சரியமில்லையே! சேகர், உன் சூழ்நிலை அப்படி; என் சூழ்நிலை இப்படி. நானோ அனாதை; நீயோ அந்தஸ்தின் சிகரம். என்ன செய்வது?

பேச்சு வளர்ந்தது. கந்தனுக்கோ பயம். கடைசியில் வற்புறுத்தி சேகரை அனுப்பிவிட்டு கண்ணை மூடினான்.

★

நாட்கள் நகர்ந்தன.

அன்று தீபாவளிப் பண்டிகை. இனவெழுச்சி வீரனை சூழ்ச்சிக்காரர்கள் கொன்ற நாள்—அந்த நாளில்தான் ஊரெங்கும் கொண்டாட்டம். அகல் விளக்குகள் வீதியை அலங்கரித்தன. விடுதியிலேயும் அந்தப் பண்டிகை இருக்கத்தான் செய்தது. மாடம்-கூடம் எல்லாம் விளக்கு மயம்! ஆனால், விடுதியின் கூரை உச்சியில் ஒரு விளக்கு இல்லாததால் களையிழந்து கிடந்ததாம். அதிகாரியின் உத்திரவின்படி கந்தன் ஒரு பெரிய அகல் விளக்கை எடுத்துக் கொண்டு விடுதிக் கூரைக்கு ஏணி போட்டு ஏறினான், ஏணியில் ஒருகாலும் கூரையில் ஒருகாலும் ஊன்றிக் கொண்டு விளக்கை எரிய வைத்துக் கொண்டிருந்தான். அப்பொழுது—

சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்த கெட்ட எண்ண வெங்கிட்டுவுக்கு ஒருநல்ல சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது.

அவன் யோசிக்கவில்லை. காரியத்தை முடித்துவிட்டான்.

'ஐயோ...அம்மா'

ஏணி கவிழ்ந்தது. கந்தன் விழுந்தான். சத்தம்கேட்டு சூழ்ந்து கொண்டார்கள் பிள்ளைகள். 'யார், கந்தனா?' என்றவாறு அலறிப் புடைத்துக் கொண்டு வந்தார் அதிகாரி— சேகரின் அப்பா! கந்தனின் கால்களிலிருந்து ரத்தம் வெளியேறிக் கொண்டிருந்தது. ஆம், வலதுகால் முறிந்துவிட்டது. கந்தனை யார் தள்ளியது என்று அதிகாரிக்கு நன்றாகத் தெரியும். வெங்கிட்டுவை கோபமாகப்பார்த்தார். அவன் உடல் பனிக்கட்டியாகிவிட்டது. நடுங்கியவாறே நின்றிருந்தான். கந்தன் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டான். கந்தனின் வலது கால் வெங்கிட்டுவின் சூழ்ச்சியால் வெட்டுண்டது.

★

பல நாட்கள் பறந்தோடின—

தன் வீட்டு வாசலிலே யாரோ நிற்பதைப் பார்த்து ஓடிவந்தான் சேகர். எதிரே கலங்கிய கண்ணீர் கிழிந்த ஆடையை நனைக்க, ஊன்று கோலை ஊன்றிக் கொண்டு நின்றிருந்தான் கந்தன். 'சேகர், இந்தக் கடிதத்தை அப்பாவிடம் கொடுத்துடு' என்றான். இருவரும் ஒருவரை ஒருவர் கலங்கிய கண்களுடன் பார்த்துக் கொண்டே நின்றனர். வாய் மூடி கண்கள் பேச நின்ற சேகர், அப்பா தன்னைக் கூப்பிடுவதைக் கேட்டு உள்ளே ஓடினான்.

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

சிறு வயதில் 'புரட்சி!'

அன்று வகுப்பறையிலே ஒரே புதுமை; புரட்சி! 'என்ன புதுமை? ஆசிரியர் இட்ட வேலைகளை தப்பாமல் செய்துவந்துவிட்டார்களோ மாணவர்கள்?'—என்று கேட்டு விடாதீர்கள். அப்படியேதும் இல்லை. அதனினும் புதுமை—வகுப்பறை சப்தமின்றி இருந்தது. ஒரே அமைதி! அது மட்டுமல்ல; மாணவச் சிறுவர்கள் முகத்திலே ஒருவித குழப்பம்—'என்ன நேரப் போகிறதோ' என எதிர்பார்த்திருக்கும் பயம்! ஆமாம்; அவர்கள் புயல்—பூகம்பம்—பிரளயம்—இத்தனையையும் ஆசிரியர் என்ற தனிமனிதரின் உருவத்தில் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்படி அவர்கள் செய்துவிட்ட தவறுதான் என்ன?

ஆசிரியர் வந்தார், சீறி எழும் பாம்புபோல! அவர் முகத்திலே ஒரே கோபம்—கண்களிலே 'சுட்டெரித்து விடுவேன்' என்பதைப் போல 'ஜிவ்' வென்ற செந்நிறம்! மாணவர்கள் நடுங்கினர்.

''டேய் யாரது? இந்தக் குற்றத்தைச் செய்தது யார்?'' என்று கேட்டார்; மன்னிக்க—உறுமினார்.

குற்றம்! பெரிய குற்றம்தான்! ஆசிரியரையே அவமானப் படுத்தி யாரோ ஒரு மாணவன்–அந்தக் கூட்டத்தில் ஒரு சிறுவன் பெரும் தவறு செய்துவிட்டான். பொறுப்பாரா ஆசிரியர்?

அவர் மறுபடியும் கேட்டார். ஒருவரும் பதில் பேசவில்லை; யாரும் குற்றத்தை ஒப்புக் கொள்ள தயாராக இல்லை. ஆசிரியர் என்னவோ யோசித்தார். விறுவிறு என்று முதல் 'பெஞ்சி'யில் உட்கார்ந்திருந்த ஒரு சிறுவனிடம் சென்றார். ''தம்பி, நீ நல்லவனாயிற்றே! இந்தக் குற்றத்தைச் செய்தது யார் என்று உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டார்.

''தெரியும், சார்''—இப்படி 'டக்'கென்று பதில் சொன்னான் சிறுவன்.

''சபாஷ்! நீ அல்லவோ நல்ல மாணவன்! சீக்கிரம் சொல், யார் அந்த முட்டாள்? அவன் முதுகுத் தோலை உரித்து விடுகிறேன்...''—என்று ஆசிரியர் அவசரப் படுத்தினார்.

பையனும் பதில் சொன்னான். என்ன பதில்? குற்றம் புரிந்த சக நண்பனின் பெயரையா சொன்னான்? இல்லை—'மன்னிக்க வேண்டும் சார்; நான் அவனைக் காட்டிக் கொடுக்க மாட்டேன்'' என்றுதான் சொன்னான்.

ஆசிரியர் அதட்டினார்: 'அடிப்பேன்' என்று பயமுறுத்தினார். பயனில்லை. கடைசியில் பேசாமல் போய் உட்கார்ந்து விட்டார். மாணவர்கள் அத்தனை பேரும் அந்தப் பையனை பாராட்டினார்கள்.

''என் பன்னிரண்டாவது வயதிலேயே நான் ஒரு புரட்சி செய்தேன்'' என்று அந்தச் சம்பவம் குறித்து பின்னால் எழுதி வைத்த அந்தச் சிறுவன் யார் தெரியுமா? அவன்தான் பெர்னாட் ஷா!

'எழுத்தாணி'

இந்த வாரம் பரிசு பெறும் தோழர்:

(●) சோ. கருணாநந்தன்;
சின்னமுதலியார் சாவடி
பொம்மையார்பாளையம்.
முத்தியால்பேட் வழி

ஏ. அக்கீம்; அரகண்டநல்லூர்.

(?) ஓய் எழுத்தாணியாரே! எங்கள் வகுப்பில் உமக்கு ஒரு பெண் பார்த்திருக்கிறேன். கலப்புத் திருமணம் செய்து கொள்ள உமக்கு சம்மதமா?

அய்யையோ! நான் முகமதலியானால் என் மனைவி 'இங்கி' அம்மாள் என்னைச் சும்மாவிட மாட்டாளே!

எஸ். பாண்டியராசன்; கோச்சி.

(?) திருவாங்கூர்த் தமிழ்ப் பகுதிகள் எல்லாம் தமிழகத்தோடு இணைக்கப்படாவிட்டால், தி. மு. க. அக்காரணத்திற்கான கிளர்ச்சிகளில் பங்கு பெறுமா?

பங்கு பெறத் தயார்—என்று அறிவிக்கும் பொதுச் செயலாளர் அறிக்கையை நீர் பார்க்கவில்லையா?

வே. ப. தர்மர்; சத்திரக்குடி.

(?) புகழேணியின் இறுதிப்படி எது?

இந்த நாட்டில் சாவுக்குப் பிறகுதான் அந்த இறுதிப் படிகள் கண்ணுக்குத் தெரியும்!

(?) மீனுக்கு ஏன் நுரையீரல் இல்லை?

இருதயமே இல்லாத மனிதர்கள் இருக்கும்போது இதைச் சொல்ல வந்து விட்டீரே!

அ. த. கணேசன்; யாழ்ப்பாணம்.

[?] தி. மு. க. கொடியின் கீழிருக்கும் ஒரு வாலிபன், செங்கொடி ஏந்திய ஒரு பெண்ணை மணந்தால்...?

அந்தச் செங்கொடியின் மேலே சமுதாய இருளைக் குறிக்கும் கருப்பும் கலந்துவிடும்!

(●) கோ. கருணாநந்தன்;
பொம்மையார் பாளையம்.

(?) காந்திக்குப் பதில் கோட்சே நேருவைக் கொன்றிருந்தால்?

அப்படி நடக்காது; ஒரு பார்ப்பான் தன் இனத்தைச் சேர்ந்த இன்னொரு உயிரை ஒருக்காலும் கொல்ல மாட்டான்!

மு. ந. இ. சாமி; பரமக்குடி.

(?) செல்லரித்துப் போன சமுதாயத்தைச் சீர்திருத்த எந்த 'மார்க்' பெயிண்ட் சிறந்தது?

'சுயமரியாதை மார்க்'கை உபயோகியுங்கள்!

பி. அகோரபாண்டியன்;
திருமங்கலம்.

(?) உலகிலேயே எந்த நாட்டுப் பெண்கள் அழகிகள்?

உலக அழகிகள் போட்டியில் கலந்து கொள்ளாத நாட்டின் பெண்கள்தான்!

இரா. கோதண்டராமன்;
சேத்துப்பட்டு.

(?) இந்தியச் சந்தையில் மிக மலிவாகக் கிடைக்கும் பொருள்கள் யாவை?

கதர்ச் சட்டை; கள்ளச் சாராயம்—இவைதான்!

வரவில்லை; தருகிறோம்!

கோடிக்கணக்கான ரூபாய் சேதத்திற்கு ஆளாகி, பிணக்காடாக காட்சி தரும் தமிழகத்தைப் பார்வையிட பண்டித நேருவுக்கு நேரமில்லையாம்; தேசீய நிவாரண நிதியிலிருந்து ஒன்றரை லட்ச ரூபாயை அனுப்பியிருக்கிறாராம்.

துரை-சங்கரன்; பறங்கிமலை.

(?) எழுத்து அறிவித்தவன் இறைவனா?

ஆமாம்; அதனால்தான் இறைவனுக்கு தூப, தீப நைவேத்யங்களைக் காட்டிவிட்டு பிரசாதத்தை எடுத்துச் செல்வதைப் போல, ஆசிரியர்களுக்கும் சம்பளம் என்ற பெயரில் அரசாங்கத்தார் ஏதோ சில வெள்ளிப் பணங்களைக் காட்டுகிறார்கள்!

கா. ஆறுமுகம்; சென்னை.

(?) இந்தியாவில் தற்போது தேவையானது எது?

சரியானபடி இயங்கும் வானநிலை ஆராய்ச்சி நிலையங்கள்தான்!

துரை. முருகேசன்; காரமடை.

(?) கண்ணீரில் மலர்வது எது?

அன்புக் கமலம்!

(?) கோயில் இல்லா ஊரில் குடியிருக்கக் கூடாதாமே?

ஆமாம்; இல்லா விட்டால் பூதேவர்கள் வாழ்வதெப்படி?

பொங்கல் மலர்

சிறுகதைப் போட்டி விபரம்

கவனிக்கவும்!

பல நண்பர்களின் கோரிக்கைக்கிணங்க போட்டியின் முடிவு தேதியை டிசம்பர் 15-ம் தேதியிலிருந்து 20-ம் தேதியாக மாற்றியுள்ளோம்.

★ மூன்று சிறந்த சிறுகதைகளுக்கு பரிசு வழங்கி, அவைகளை வருகிற **பொங்கல் மலரில்** வெளியிடவும் தீர்மானித்துள்ளோம். முதல் பரிசு ரூ. 100; இரண்டாவது பரிசு ரூ 75; மூன்றாவது பரிசு ரூ 50—வெற்றி பெற்றவருக்கு பொங்கலன்று பரிசுத் தொகை கிடைக்கும். பரிசு பெறாவிடினும் வெளியிடத் தகுதியிருப்பின் அவைகள் வார இதழில் பிரசுரிக்கப்படும்.

எழுத்தாளர்களுக்கு:

★ சிறுகதை கூடிய அளவில் சிறுகதையாகவே இருக்க வேண்டும் கதைகள் தெளிவாக ஒரு பக்கத்தில் எழுதப்பட வேண்டும். கதைகளைத் திரும்பப்பெற விரும்புவோர் போதிய அஞ்சல் தலைகள் அனுப்ப வேண்டும். போட்டிக்குரிய எல்லாக் கதைகளும் டிசம்பர் 20-ம் தேதிக்குமேல் கவனிக்கப்பட மாட்டாது. கதைகள் அனுப்பப்பட வேண்டிய முகவரி;

சிறுகதைப் பகுதி,
முரசொலி,
சென்னை-6.

விற்பனையாளர்களுக்கு:

மலருக்கு முன்பணம் அனுப்பும கடைசி தேதி 15—12—55. அதற்குமேல் வரும் 'ஆர்டர்'கள் கவனிக்கப் படாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

எரிமலை குமுறுது...

★ 9-ம் பக்கத் தொடர்ச்சி

விந்தியத்திற்கு வடக்கிலே குவிந்து கிடக்கும் இயந்திரசாதனங்கள் எத்தனை?

குடிசைத் தொழில் பற்றிய உபதேசம்; அங்கெல்லாம் பயன்படாதது; நந்தா போன்றவர்களின் கண்களில் படவில்லையா?

ரோதிரத்தில் நுழைத்தெடுக்கின்ற அளவில் மெல்லிய துகில் தயாரித்த திராவிடர்களை கைத்தறிக்குக்கூட பயன்படாத நூலைத் தருகின்ற 'அம்பர் சர்க்கா'க்களை சுற்றவைத்து என்றென்றும் தென்னாட்டை, உலக நாடுகளின் பார்வையிலிருந்து அழுச்சிவைக்க—வடநாட்டு தொழில் முதலைகள் செய்கின்ற ஏமாற்று திட்டம் தான் இந்த 'சர்க்கா' திட்டம் என்பதை நாம் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

பொளாதார வளர்ச்சியில், திராவிடத்தை ஏமாற்றுகின்ற இந்த திட்டத்திற்கு ஆதரவு திரட்டுவதற்காக, நந்தா மக்கள் சபை உறுப்பினர்களைக் கூட்டிவைத்து 'அம்பர் சர்கா'வினால் வேகமாக நூல் நூற்கமுடியும் என்பதை செய்து காட்டினாராம்!

நாட்டின் வளரும் தொழிலுக்கு 'அம்பர் சர்காவை' நம்புவது ஆபத்து, என்ற டி. டி. கே. யின் குரல், தொழில் வளர்ச்சயில் வடக்கையும்—தெற்கையும் ஒப்பிட்டு பார்த்த காரணத்தால் எழுந்த எதிரொலி என்று நாம் கூறுவதில் தவறென்ன இருக்க முடியும்.

அமைச்சர் அவையில் வடக்கு வேறு தெற்கு வேறு என்ற எண்ணம் குமுறிக் கொண்டிருக்கிறது, என்பதற்கான அறிகுறியே நந்தா—டி. டி. கே. கருத்து வேறுபாட்டிற்கு காரணம்.

பூமிக்கு அடியிலே குமுறிக் கொண்டிருக்கும் சக்திகள், ஒருநாள் எரிமலையாக மாறி வெடித்துச் சிதறுவதைப் போல-மந்திரி சபை வரையில் குமுறிக் கொண்டிருக்கும், இந்த வடக்கு, தெற்கு, வேறுபாடு வெடித்துச் சிதறுகின்ற அந்த நாள்தான் தென்னகத்திற்கு வாழ்வளிக்கின்ற பொன்னாள்—என்று கூற நாம் கடமைப் பட்டிருக்கிறோம்;

தேசிய வட்டாரத்தில் இருக்கும் சில 'பெரிய புள்ளி'களிடம் கூட வடக்கு—தெற்கு—என்ற —பேதம்—இல்லை, இல்லை புனித எண்ணம், அரும்பு விட்டிருக்கிறது என்பதற்கான விடிவெள்ளிதான் இந்த நிலைமை; இந்த அரும்பு—மலராகி கொடுமைகளுக்கெல்லாம் முடிவுதேடும் அந்த நாள் வெகு தூரத்தில் இல்லை என்பதை, ஏகாதிபத்ய திமிர் பிடித்தலையும் வடநாட்டு 'பிம்பங்களுக்கு'-நினைவுபடுத்த விரும்புகிறோம்!

★